முரசொலி

~வார இதழ்~

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 4 | 8—11—57 | வெள்ளி | ஒலி 29

பச்சைத் தமிழரின் 'பச்சை'த் துரோகம்!



★ கற்பனை உரையாடல் ★

‘தீஞ மூஞ காஞ’

[“இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்— என்ன பயத்ததோ சால்பு?”—இந்தக் குறளின் விளக்கத்தை ‘விகட’னில் படித்துக் கொண்டிருந்த போது ஒரு சந்தேகம் தோன்றியதால் திருவள்ளுவர் வீட்டுக்குச் செல்ல அங்கே திரு ஆனந்த விகடனார், வள்ளுவருடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.]

விகடன்: உங்கள் குறளுக்கு அருமையான விளக்கம் இந்த இதழிலே திரு. அ.ச. ஞானசம்பந்தனார் எழுதியுள்ளதைப் படித்தீர்களா?

வள்ளுவர்: இல்லையே; என்ன விளக்கம்?

விகடன்: சேதி நாட்டரசர், ‘மெய்ப்பொருள்’,— ‘மெய்யெலாம் நீறு பூசிக் கொண்டும், வேணிகள் முடித்துக் கட்டிக் கொண்டும்’ வரும் எந்த சிவனடியார்களையும், சிவனடியார் போன்று உபசரித்து, அவர்கள் வேண்டியவற்றைக் கொடுத்து வாழ்வதையே, குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்!

வள்ளுவர்: இது அரசர்களுக்கேற்ற குறிக்கோள் அல்லவே! சடாமுடி தரித்துக் கொண்டு நாட்டினுள் பகைவர்கள் நுழைந்தாலும் அரசர் பார்த்துக் கொண்டிருக்கலாமா? போலி வேடதாரிகள், நாட்டை அழித்தாலும் அரசர் பார்த்துக் கொண்டிருப்பாரா, என்ன?

விகடன்: அவருடைய குறிக்கோள் சரியானதா, தவறானதா — என்பதைப்பற்றி ஆராய நமக்கு உரிமை இல்லை!

வள்ளுவர்: உரிமை இல்லையா? ஏன்?...குறிக்கோளே தவறானதாயிற்றே! அவர் வாழ்க்கையையா என் குறளுக்கு எடுத்துக் காட்டாகத் தேடிப் பிடிக்க வேண்டும்? அந்தச் சடாமுடியும் போலி வேடமும் எனக்குப் பிடிக்காத ஒன்றாயிற்றே! அதனால்தான்

“மழித்தலும் நீட்டலும்
வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்”-

எனப் பாடியுள்ளேன்.

விகடன்: தங்களை முன்பே பார்த்திருந்தால், இதுபோல படம் போட்டிருக்கமாட்டேன்! எங்கள் சித்திரக்காரர் உங்களை ஒரு முனிவர் போலப் போட்டு விட்டாரே! ஆனால் நல்ல வேளையாக, அவர், இந்த வார இதழிலே உங்களுக்குப் பூணூல்போட மறந்து விட்டார்!

நான்: (ஆச்சரியத்துடன்) என்ன? விகடனிலே பூணூலில்லாத வள்ளுவர் படமா?... ஐயா, விகடனாரே! ஐம்பது புதுக்காசு வேண்டுமானாலும் தருகிறேன்; ஒரு பிரதி கொடுங்களய்யா!

விகடன்: அது மட்டுமா? இராஜாஜியை வள்ளுவராக்கி, இந்தி எதிர்ப்புக் குறட் பாக்கள் இயற்றியிருக்கிறேனே; நீங்கள் ஆனந்த விகடன் படிப்பதில்லையா?

நான்: உண்டு! யாராவது நண்பர்கள் வாங்கிவந்தால் சிறிது நேரம் புரட்டிப் பார்ப்பேன்! கடந்த 32—ஆண்டுகளாக வால்மீகி, கம்ப இராமாயணத்தை விடாப்பிடியாக பிடித்திருந்த தாங்கள், திடீரென உள்ளம் மாறி, “குறள் கண்ட வாழ்வு” குறித்து கட்டுரைகள் வெளியிட ஆரம்பித்துள்ளீர்கள்! “இந்தி இப்போது வேண்டாம்!” என்ற அளவுக்காவது தலையங்கம் தீட்டியிருப்பதாகக் கேள்விப்பட்டேன்!...தங்கள் உள்ளம் மேலும் மாற்றமடையுமானால் விகடனுக்காக வாரம் 25—காசுகள் செலவழிப்பதில் ஏதாவது சிறிது பயன் கிடைக்கலாம்!...அது சரி; நான் வந்தபோது சேதி நாட்டு மெய்ப்பொருளரசரைப் பற்றி ஏதோ கதை கூறினீர்களே!

விகடன்: ஆமாம்! திருவள்ளுவர் கூறியதுபோலவே, பகைவன் ஒருவன் போலி வேடம் தாங்கி வந்து மெய்ப்பொருளரசரைக் கொன்று விட்டான்! மெய்ப்பொருளரசர் அருகிலேயிருந்த மெய்க் காப்பாளன், அந்தப் போலி வேடதாரியைக் கொல்லப் பாய்ந்தான்! ஆனால் அரசர் அவனைத் தடுத்து விட்டார்!

நான்: ஏன் அவர் அதைத் தடுத்தார்?

விகடன்: சிவனடியார்களையும் சிவனடியார் வேடந் தாங்கியவர்களையும் வரவேற்று உபசரிப்பதுதான் ‘அந்த அரசரின் குறிக்கோள்’ என்று முன்பே கூறினேனே!

நான்: அவரது முட்டாள்தனமான குறிக்கோளைக் காப்பாற்றுவதற்காகத்தான், அந்தப் போலி வேடதாரியைக் அவர் காப்பாற்றினாரே யொழிய, “தன்னைக் கொன்றவனையும் காப்பாற்ற வேண்டும்!” என்ற உயர்ந்த எண்ணத்தால்—பெருந்தன்மையால் காப்பாற்றவில்லையே!

வள்ளுவர்: (குறுக்கிட்டு) தவறான குறிக்கோளுடன் வாழ்ந்தவர் வரலாற்றையா என் குறளுக்கு எடுத்துக் காட்டாகக் கூற வேண்டும்? “ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தைக் காட்டு!” என்று கூறிய ஏசுவின் வரலாறு இல்லையா? “தன்னை உதைத்த செருப்பு அணிந்த கால்கள் நோகுமே!” என வருந்திய காந்தியார் வரலாறு இல்லையா? தன்னைக் கொன்ற கோட்சேயைக்கூட அவர் உயிரோடு இருந்தால் காப்பாற்றி யிருப்பாரே!... ஊம்; குறள் நெறிப்படி வாழும் மக்களைக் காண்பதே இப்பொழுது குதிரைக் கொம்பாக இருக்கிறதே! அதுவும் தமிழகத்திலே உள்ள மக்களை நினைத்தால் என் நெஞ்சம் குமுறுகிறது! திருக்குறள் தோன்றிய நாட்டிலா இவ்வளவு சாதிச் சண்டைகள்? சமயப் பூசல்கள்? முதுகுளத்தூரிலே நடைபெற்ற வெறி பிடித்த மிருகத்தனமான செயல்களை நினைக்கும்போது ‘நானும் ஓர் தமிழன்’ எனக் கூறிக் கொள்ள வெட்கப்படுகிறேன்! குறள் நெறிப்படி நடக்கும் ஒருவரை உதாரணமாக, உங்களால் எடுத்துக் காட்ட இயலுமா?

நான்: மன்னிக்க வேண்டும் திருவள்ளுவரே! என்னால் எடுத்துக் காட்ட இயலும்!

வள்ளுவர்: யார் அது?

நான்: அவர்தான் எங்கள் அண்ணா! அண்ணாவின் தம்பிகள் கூடத்தான் குறள் நெறிப்படியே வாழ்கிறார்கள்! ஏன்; எங்கள் தி. மு. க— திராவிட முன்னேற்றக் கழகமல்ல: திருவள்ளுவரே!

[திடீரென நகைச்சுவை அரசர் கலைவாணர் அங்கே தோன்றி, “எங்கள் தி.மு.க. தீஞ. மூஞ. காஞ!....திருக்குறள் முன்னணிக் கழகம்! தி. மு. க!......என்று பாடி விட்டு மறைகிறார்.]

ஆம்; தி. மு. க. திருக்குறள் முன்னணிக் கழகம் தான்! அதற்கு எடுத்துக் காட்டு எங்கள் அண்ணா!

விகடன்: மிகக் குறுகிய புத்தி படைத்த நீங்களா, குறள் நெறிப்படி வாழ்பவர்கள்? குறள்நெறிப்படி வாழ்வதற்கு ஏதாவது ஆதாரம் காட்ட முடியுமா?

நான்: ஐயா! எங்கள் தந்தை ஈ. வெ. ரா.வைப்பற்றித்தான் உங்களுக்குத்தான் தெரியுமே!

விகடன்: ஐயையோ! அவர் எங்களையெல்லாம் கொன்று குவிக்கப் படை திரட்டுகிறாராமே!

நான்: பயந்து நடுங்காதீர்!...... அவர் எங்கள் அண்ணாவையும், இதர தம்பிகளையும், தேர்தலிலே தோற்கடிக்க எவ்வளவு பாடுபட்டார்! அண்ணாவைக் கண்டபடி இழிவாகப் பேசியதை ‘டேப்ரிகார்’டரிலே ஒலிப்பதிவு செய்து, தஞ்சை மாவட்டம் முழுவதும்காங்கிரஸ்காரர்கள் போட்டார்களே! பெரியாரின் அந்தப் பேச்சின் விளைவாகவும், அவர் தப்புப் பிரச்சாரங்களின் விளைவாகவும்தானே காங்கிரசுக்கு அவ்வளவு அமோக வெற்றி கிடைத்தது! இப்பொழுது ஒரு காங்கிரஸ் எம். எல் ஏ.யாவது பெரியாருக்கு ஒப்புக்காவது நன்றி செலுத்துகிறாரா? ‘வேல் எறிந்தும் மெய்யதா வால் குழைக்கும் நாய்’-‘அந்த நாயனைய கேண்மை’யாவது அவர்களுக்கு இருக்கிறதா? மேலும் பெரியாரைக் கவிழ்க்க என்னென்ன சூழ்ச்சிகள் செய்யலாமோ— அவ்வளவையும் அவர்கள் செய்துவருகிறார்கள்!

ஆனால் தந்தைக்கு செய்யவேண்டிய கடமையை நாங்கள் மறந் தோமில்லை! எங்கள் அண்ணா தன் பேச்சிலே, பெரியாரது போராட்டத்தைப் பற்றி சட்ட சபையிலே, அழகாக எடுத்துக்கூறி தன்கடமையை நிறைவேற்றியிருக்கிறார்! “இந்த அரசாங்கம் எந்த பிரச்சினையையும்—முதுகுளத்தூரானாலும் சரி;முரளீஸ்கபே விஷயமானாலும் சரி — மூலையிலேயே தீர்ப்பதில்லை மூண்டபிறகுதான் அதனை அணுகுகிறது!” என்று இடித்துக் காட்டியிருக்கிறார். “பெரியார் நடத்துகின்ற இந்த போராட்டத்திலே ஏறக்குறைய 700 பேர் சிறைக்கு சென்றும், ஏன் அரசாங்கத்தின் கவனம் அங்குப் பாய்ச்சில்

“ராஜாஜியின் குறள் !”



வெள்ளி 8-11-57 சென்னை

‘கருப்பு’ அறிக்கை!

கல்வி பற்றிய வெள்ளை அறிக்கையை—வெள்ளை அறிக்கையா அது; இல்லை; கருப்பு அறிக்கையை—ஆராய்ந்து; முன்னால் சட்ட மன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு தந்திருக்கும் சிபார்சுகள் சில தமிழர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தணல் கொட்டுவதாய் அமைந் திருக்கிறது.

மொழிப் பிரச்சினை பற்றிய அதன் பகுதியில் சரியான சூழ்ச்சியும்; ஏக இந்தியப் பித்தமும் தெள்ளத் தெளிய புகுந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தியைத் துணிவோடு கட்டாயப் பாடமாக்கிவிட்டு ஒரு நிமிடம்கூட பதவியில் இருக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்ட ஆட்சியாளர்கள்; அந்த மந்தி அலங்காரியை மூடித் திரை யிட்டுத் தமிழ்ப் பள்ளிகளுக்கு அழைத்துவரும் பணியிலே ஈடுபட்டிருக் கிறார்கள், தமிழுணர்வு சிறிதுமற்ற இந்தத் துரைத்தனத்தார்!

மொழிகளை மூன்று பிரிவுகளில் சொல்லித் தருவதற்கு சிபாரிசு செய்திருக்கிறது, அந்தக் ‘கருப்பு’ அறிக்கை!

(1) பிரதேச மொழி,

(2) இந்தி அல்லது வேறு இந்திய மொழி,

(3) ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத வேறு மொழி

—ஆக இனிமேல் தமிழ் மாணவர்கள் அனைவரும் இந்தத் தலைப்பின்கீழ் மூன்று மொழிகளைக் கட்டாயம் பயின்று தீரவேண்டும். இருந்தாலும் சொல்லுகிறார் அமைச்சர், இந்தி கட்டாயப் பாட மல்லவென்று!

இதுபற்றி விளக்கம் தரும்போது அமைச்சர் சுப்பிரமணியனார் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:

“வேறு எந்த இந்திய மொழியையும் படிப்பதற்கு இரண்டாவது பிரிவு வசதியளிப்பதைக் கவனிக்க வேண்டும். இந்தியைப் படிக்க இஷ்டமில்லாதவர்களின் விருப்பத்தை இது பூர்த்தி செய்கிறது. அதேபோல் மூன்றாவது பிரிவு, அவரவர் விருப்பம்போல் ஜெர்மன், பிரெஞ்சு அல்லது ரஷ்ய பாஷையைக்கூட படிப்பதற்கு வசதி யளிக்கிறது.”

—ஆகவே இந்தி கட்டாயப் பாடமாக்கப்படவில்லை என்பதை எல்லோரும் கவனிக்க வேண்டும் என்று கூறுகிறார், கல்வி அமைச்சர்.

“இந்தி கட்டாயப் படிப்புக்கு வசதி செய்வது அவசியம் என எதிர் காலத்தில் கருதப்பட்டால் அந்தக் கட்டத்தில் இவ்விஷயத்தை ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டு, மக்களின் விருப்பத்தைக் கண்டறியலாம்.”

—எனவே இந்தி இப்போது கட்டாயமாக்கப்படவில்லை; எதிர் காலத்தில் வேண்டுமானால் முயற்சிக்கலாம் என்று கூற வருகிறார், அமைச்சர்!

ஆனால் திரும்பத் திரும்ப இந்தி கட்டாயப்பாடமாக்கப்படவில்லை என்று அமைச்சர் கூறினாலும்கூட; ‘கட்டாயம்’ என்று ஒரு வார்த்தை யைத் தவிர கட்டாயப் பாடத்திற்குண்டான அத்தனை இலட்சணங் களும் இந்த இரண்டாவது பிரிவிலே அமைந்திருப்பதைக் காண லாம்.

இதுவரை தாய்மொழியோடு ஆங்கிலத்தையும் சேர்த்து இரண்டு மொழிகளைத்தான் கட்டாயப் பாடமாகப் படித்து வந்திருக்கிறான், தமிழ் மாணவன்! ஆனால் இப்போது மூன்றாவது மொழி யொன்றைப் படிக்க வேண்டியதற்கு அவசியம் என்ன ஏற்பட்டது? பதிலில்லை; அறிக்கையில்!

‘கருப்பு’ அறிக்கையின் இந்தச் சிபார்சுகள் ஏற்றுக் கொள் ளப்பட்டால் இனிமேல் ஒவ்வொரு தமிழ் மாணவனும் தாய்மொழி யோடு ஒரு ‘இந்திய மொழி’யையும்; இன்னொரு ‘வேறு’ மொழி யையும் எப்பாடுபட்டாவது கற்றே தீரவேண்டும்!

இப்போது அவன் கற்றுவரும் தமிழ், ஆங்கில மொழிகளோடு அவன் கட்டாயமாகக் கற்க வேண்டிய மூன்றாவது மொழி எது?

இந்தி அல்லது ஏதாவதொரு இந்திய மொழியாம்!

இந்தி அல்லாத வேறு ஏதாவதொரு இந்திய மொழி என்றால் அது என்ன மொழி?

சரியான விளக்கம் இல்லை!

அவர்களின் வாசகப்படி தெலுங்கு, மலையாளம் போன்ற திராவிட மொழிகளும் இந்திய மொழிகள்தான்; உருது, வங்காளி போன்ற வடநாட்டு மொழிகளும் இந்திய மொழிகள்தான்!

இந்திய மொழிகள் என்று குறிப்பிடுவது இந்த இந்திய உபகண் டத்தில் பேசப்படுகிற மொழிகள் என்றால் மொத்தம் அவற்றின் கணக்கு 200—க்கு மேற்பட்டதாக இருக்கும்!

இப்படி 200 மொழிகளுக்கும் சேர்த்து; அவற்றையெல்லாம் விரும்பிப் படிக்க நினைக்கிற மாணவர்களுக்கு தமிழகத்துப் பள்ளி களிலே வசதி செய்யப்படுமோ?

அப்படியில்லை யெனில், அவற்றுள் எந்தெந்த மொழிகளின் பயிற் சிக்குத்தான் தமிழகத்துப் பள்ளிகளிலே வசதி செய்யப்படும்?

—இவைகளுக்கெல்லாம் சரியான பதில் கூறவில்லை, ‘கருப்பு’ அறிக்கை!

இரண்டாவது பிரிவின்கீழ் இந்தி மொழியைத்தான் கட்டாயம் பயில வேண்டுமென்ற அவசியமில்லை; வேண்டுமானால் அவர்கள் இந்தி அல்லாத வேறொரு இந்திய மொழியைக் கற்கலாம்!

—சூழ்ச்சி நிறைந்த அமைச்சரது வார்த்தை அடுக்குகள் இவை!

ஆனால் தமிழகத்துப் பள்ளிகளில் இனி நடக்கப் போவது என்ன வென்றால் இந்தியைக் கற்பதற்குத்தான் போதிய வசதிகள் இருக்குமே தவிர, இந்தி அல்லாத வேறொரு இந்திய மொழி யைக் கற்பதற்கு வசதிகள் இருக்காது!

அப்படி வசதி இல்லாத போதிலும்; ஏன் அந்த வசதிகளை உட னடியாகச் செய்யவில்லை-என்றும் மேலிடத்தார் ‘அதட்டிக் கேட்கப் போவதில்லை.

ஆக; தமிழகப் பள்ளிகளிலே இந்திப் படிப்புக்கு மட்டும்தான் வசதிகள் இருக்கும்.

ஆனால் அதே பிரிவின்கீழ் இந்தி அல்லாத இன்னொரு இந்திய மொழியைக் கற்பதற்கு வசதி இருக்காது!

ஆனால் இரண்டாவது பிரிவின்கீழ் தமிழ் மாணவன், அந்தப் பிரிவுக்குள் அடங்கும் ஏதாவது ஒரு மொழியைக் கட்டாயமாகப் பயின்றே தீரவேண்டுமே!

அந்த நேரம் தமிழ் மாணவத் தோழனின் நிலைமை என்ன?

வேறு வழியின்றி இந்தியைத்தான் அவன் கற்றுத் தீரவேண்டும்!

—இவ்வளவு கொடிய நயவஞ்சகத் தந்திரத்தை உள்ளடக்கிக் கொண்டுதான் கூறுகிறார் அமைச்சர், இந்தி கட்டாயப் பாடம் அல்ல-என்று!

கொடுமைக்காரன் ஒருவன் பயங்கர வேட்டை நாயொன்றை அவிழ்த்து விட்டான். அது அப்பாவி மனிதனொருவனைத் துரத் திக் கொண்டு வருகிறது. அவன் ஓடுகிறான்; ஓடுகிறான்; இறுதியில் மலையுச்சி யொன்றை அடைந்து விட்டான். இனி அப்பால் அவன் ஒரு காலடி எடுத்துவைப்பானேயானால் படுபாதாளத்தில்தான் விழுந்து சாக வேண்டும்!

ஓடாமல் அந்த இடத்திலேயே நின்றுகொண்டிருந்தால் பொல் லாத நாயின் கையிலே சிக்கித் தவிக்க வேண்டும்.

‘என்னய்யா வேடிக்கை’ என்று அந்தக் கொடியவனைக் கேட்டால் ‘என் நாய் பேசாமல்தானே வருகிறது; வேண்டுமானால் அந்த மனிதன் ஓடித் தப்பித்துக் கொள்ளட்டுமே!’ என்று சிரித்துக் கொண்டே கூறினானாம்!

இந்தி எனும் செந்நாயை அவிழ்த்து விட்டு; தமிழகத்து மாணவர் களை மலையுச்சிவரை கொண்டு சென்று; அதற்கு அப்பால் வேறு இந் திய மொழிகளைக் கற்பதற்கு வசதியளிக்காமல் ஒரு சூன்யப் பிரதேசத் தைச் சிருஷ்டித்து; ‘நான் என்ன செய்வேன்; ஓடித் தப்பித்துக் கொள்ள வசதி யிருக்கிறது’ என்று அமைச்சர் சுப்பிரமணியம் கூறு வதும்—இதைப் போலத்தான் இருக்கிறது!

செந்நாயை அவிழ்த்துவிட்ட கொடியவனைக் காட்டிலும் கொடியவராகக் காட்சி தருகிறார், கோங்குச் சீமை வீரர்!

இந்தியை மறைமுகமாகத் திணிக்கும் இந்தக் கோழையின் வீரம் அவரது கையாலாகாதத் தன்மையை மட்டுமல்ல; அவரது தாய் மொழித் துரோகத்தையும்தான் படம் பிடித்துக் காட்டுகிறது!

இந்தச் சதிவேலையைத் தமிழர் அனைவரும் ஒட்டு மொத்தக் கூட்டாக நின்று எதிர்ப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

‘தாய்’ சோற்றுக்கு அழுகிறாள்- ‘மகன்’ தானம் அளிக்கிறான்!

பர்மாவில் வந்து வாழும் இந்தியர்களில் நூற்றுக்கு [illegible]க்கும் அதிகமான பேர் தமிழர்கள். மீதியுள்ளோர்களில் ஒரு பாதி முதலாளிகளாகவும், மறு பாதி நடுத்தர நிலையிலுள்ளோராகவும் இருக்கின்றனர். ஆனால் தமிழர்களில் நூற்றுக்கு எட்டு பேர்கூட முதலாளிகள் இல்லை.

பர்மாவின் கிராமப் புறங்களில், பட்டிக் காடுகளில் ஒட்டிய உடலும், உலர்ந்த விழிகளுமாக வறுமை கொட்டுகின்ற நிலையில் வாழ முயன்று கொண்டிருக்கும் தமிழர்களை ஏராளமாய் காணலாம். இலங்கைத் தீவிலும், மலேயா காட்டிலும் சித்திரவதைக் குட்படுத்தப்படும் தமிழர்களைப்போல பர்மா நாட்டிலும் தமிழர்களைக் கொடுமைக் குட்படுத்தும் சில சட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன.

சென்ற உலகப் போரின் போது சீர்கேடடைந்து, இப்பொழுது சிறப்பு பெற்றிருக்கும் ஜப்பான் நாட்டுக்குச் சுற்றுலா சென்றிருந்த பண்டித நேரு பல நாடுகளையும் பார்வையிட்டு சிறப்பித்தது போலவே பர்மாவிலும் தன் பாதங்களைப் பதித்து ‘புனித’ப்படுத்தியுள்ளார். சித்தார்த்தர் ஆலயங்களையும், சிங்காரச் சோலைகளையும், புதிய நகரங்களையும், பெரிய ஆலைகளையும் கண்டு களிக்கலாம் என்று எண்ணிச் சென்ற பண்டிதரைச் சந்தித்து, பிழைக்கப் புகுந்த நாட்டில் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எடுத்துக்கூறி, ஒரு விண்ணப்பமும் கொடுத்துள்ளார்கள் பர்மா வாழ் தமிழர்கள்.

பண்டித நேருவும் காமராசர் [illegible]ணியிலே "பார்க்கலாம்" என்ற பதிலைத்தான் பரிசாகத் தந்திருக்க முடியும். தென்னகத்து மக்கள் மிகுதியாக வாழுகின்ற வெளி நாடுகளில் தென்னாட்டவர்களையே அரசாங்கத் தூதுவர்களாக அனுப்ப வேண்டுமென்று நாம் பலமுறை எடுத்துக் கூறி வற்புறுத்தி வந்திருக்கிறோம். இதே கருத்தை கேரள அரசியல் வாதிகளும் கூறியுள்ளனர். ஆந்திரத் தலைவர்களும், கன்னடப் பெரியோர்களும் இதே கருத்தை எதிரொலிக்கத் தவறியதில்லை. ஆனால் டில்லி அரசாங்கம் நமது வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க மறுக்கிறது. அதன் விளைவுதான் இந்நாட்டு எல்லைக்கப்பால் மக்கள் தொல்லைக்காட்படுகின்றார்கள்.

இன்று நாம் திராவிடத்தைத் தனியாக்கு' என்ற முரசு கொட்டுகின்ற பொழுது நம்மை முறைத்துப் பார்ப்போருக்கு பர்மாவின் 'வரலாறு' பதில் அளிக்கிறது. 'அகில பாரதம்' என்று சொல்லி ஆனந்தப்படுகிறார்களே; அந்த அகில பாரதத்தின் ஒரு பகுதியாகத்தான் 1935-க்கு முன்னால் பர்மா திகழ்ந்தது. கலை, கலாச்சாரம், பழக்க வழக்கம், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அந்நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்து தனிநாடு தேவை என்று முழக்கம் இட்ட பொழுது, அன்று அகில இந்தியாவையும் 'கட்டியாண்ட ஆங்கிலேயர்கள் பர்மா வாழ் மக்களின் உரிமை உணர்ச்சியை உணர்ந்தனர். நாட்டைப் பிரித்துக் கையில் கொடுத்தனர். அப்படியேற்பட்ட பிரிவினையின் விளைவாக பர்மா தர வேண்டிய கடன் பங்கு 68 கோடி ரூபாய். இந்தக் கடன் பங்கு முழுவதையும் பர்மா பிறகு நமக்குத் திருப்பித் தருவது என்ற அடிப்படையில் இந்தியா பொறுப்பேற்றது. ஆனால் அந்தத் தொகையை பர்மா இதுவரை இந்தியாவுக்குத் திருப்பித் தரவேயில்லை. எனினும் இந்தியா 1954 ஏப்ரல் திங்களில் பர்மாவோடு செய்த உடன்பாட்டின்படி 68 கோடி கடன் தொகையை 20 கோடியாகக் குறைத்துக் கொண்டது. பர்மா தர வேண்டிய மீதித் தொகையான 48 கோடி ரூபாயைத் தர வேண்டாம் என்று 'இந்திய அரசாங்கம் விட்டுக் கொடுத்தது. இன்று திட்டத்துக்குப் பணம் தேவை என்று திருவோடு ஏந்தி அயல் நாடு சென்று கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கும் அரசாங்கம் அன்று 48 கோடி ரூபாயை தானம் கொடுத்தது. இப்போதைய செலாவணி கணக்கில் அந்த 48 கோடி ரூபாய் 200 கோடி ரூபாய்க்குச் சமம். ஆனால் இந்தப் பெருந் தொகையைத் தள்ளிக் கொடுத்ததற்கு ஈடாக பர்மா இந்தியாவுக்குக் குறைந்த விலைக்கு அரிசி தர வேண்டும் என்றும் ஒரு ஏற்பாடு செய்து கொண்டது. ஆனால் அந்த உடன்படிக்கை ஏட்டளவில் நின்றதேயொழிய நடவடிக்கையில் வரவேயில்லை. இந்தியா பர்மாவுக்கு 'காலத்தால் செய்த ஞாலத்தின் மாணப் பெரிய' உதவி இது.

ஒரு சில மாதங்களுக்கு முன்னதாக பர்மாவுக்கு பாரதம் வேறொரு உதவியும் செய்திருக்கிறது. 1960-ம் ஆண்டுக்குப் பிறகு பன்னிரண்டு ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பத் தரவேண்டும் என்ற ஒப்பந்தத்தோடு 43·75 சத வட்டியில் 20 கோடி ரூபாய் கடன் புதிதாகக் கொடுத்திருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பணமில்லையே என்று திண்டாடி நின்ற வேளையில் அரசாங்கம் இந்தக் கடனைக் கொடுத்தது. தனக்கே தகராறாக இருக்கும் வேளையில் தம்பிக்குப் பலகாரம் வழங்கியது டில்லி. இது குறித்து பண்டித நேருவிடம் பாராளு மன்றத்தில் கேள்வி கிளப்பிய பொழுது "இந்தியா உலக அரங்கில் மதிப்பு பெறுவதற்கு இப்படிக் கடன் கொடுப்பது தேவைதான்" என்ற கருத்துப்பட பதில் தரப்பட்டது. 'தனக்குப் போக தானம்' என்பது பழமொழி. இந்த நிலையில் அண்டை நாட்டுக்குக் கடன் வழங்கி தன் "அந்தஸ்தை"க் காப்பாற்ற முயல்கிறது டில்லி.

"எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்பது வள்ளுவர் வாய்மொழி. ஆனால் பர்மா, இந்தியா செய்த அத்தனை உதவிகளையும் மறந்துவிட்டு இந்தியர்களைக் கொடுமைப்படுத்துகிறது; குரூரமாக நடத்துகிறது.

பர்மா வாழ் இந்தியர்களின் பிரச்சினை குறித்து "டில்லி விழித்தெழுமா?" என்ற தலைப்பில் 1—11—1957-ல் தலையங்கம் எழுதிய 'தினமணி' நாளிதழ், "கலகத்தால் அவதியுற்று ஒத்தாசையை நாடும் பர்மாவுக்குப் பொருளாதாரச் சீரமைப்புக்கு நாம் உதவி அளிப்பது நியாயமே. ஆனால் நட்பு என்பது சொந்த வாழ்விலேயே இரு வழி உறவாகத்தான் இருக்க முடியும். ஆனால் இந்தியரது பிரச்சினைகள் நியாயமாகத் தீரவும், நமது அரிசித் தேவையிலேனும் சிறிது சலுகை கிடைக்கவும் கடனுதவிப் பேச்சு நடந்தபோது கிடைத்த வாய்ப்பை நமது காருண்ய சர்க்கார் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இது அறியாமையின் விளைவா அல்லது அசட்டுப் பெருந்தன்மைக்கு அடையாளமா என்று தெரியவில்லை. போனது போகட்டும்; இப்பொழுதேனும் அவசர உணர்ச்சியுடன்கூட பர்மா இந்தியர் குறைகள், நமது அரிசித் தேவை ஆகிய இரண்டையும் இந்திய சர்க்கார் கவனித்து பர்மாவுடன் உடன்பாடு கண்டாக வேண்டும்," என்று கூறுகிறது.

பர்மா வாழ் இந்தியர்கள் முக்கியமாக மூன்று வித குறைகளால் தாக்கப்பட்டுள்ளனர். அந்நாட்டு மக்களுரிமை மறுக்கப்படுவது முதல் குறை மட்டுமல்ல; முக்கியமான குறையும்கூட. ஏறத்தாழ பத்து இலட்சம் இந்தியர்கள் பர்மாவில் வாழுகின்றனர். ஆனால் இவர்களுள் 40,000 பேர்தான் மக்களுரிமை கோரி மனுச் செய்து கொண்டனர். அந்நாட்டில் ஆண்டுகள் பலவாக உழைத்து உழைத்து உருக்குலைந்து 'அக்கால உலகிருட்டைத் தலை கீழாக்கி அழகியதாய் வசதியதாய் செய்து தந்த' தமிழர்கள் ஏன் வாழும் உரிமையை பெருமளவில் கோரவில்லை? நூற்றுக்கு நான்கு பேர் மட்டுமேதான் உரிமை கோரியுள்ளனர் என்றால் அதன் உட்கிடப்புதான் என்ன? மனுக்களை அனுப்புவதற்கும் அவைகளைப் பார்த்து அனுமதிப்பதற்கும் ஏதேனும் தடங்கல்கள், நிர்ப்பந்தங்கள் இருக்குமா என்ற ஐயம் நம் அனைவர் நெஞ்சிலும் எழுகிறது. இந்த 40,000 விண்ணப்பங்களில் ஏறத்தாழ 6,000 தான் இதுவரை பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. ஏறத்தாழ பதினைந்து சதமே பரிசீலனை செய்யப்பட்டுள்ளது என்றால் ஏன் இந்தத் தாமதம்? எதனால் அதிகாரிகள் மத்தியில் இந்த அக்கரையற்ற தன்மை?—என்ற கேள்விகள் இதயத்தில் எழுவது இயல்பு. இதன் அடிப்படை உண்மைகளைக் கண்டறிய இதுவரை டில்லி அரசு முயன்றதுண்டா என்றால், இல்லை! இனி மேலாவது முயலுமா என்றால், அதற்குக் காலம்தான் பதில் தர வேண்டும்.

பர்மாவில் மக்களுரிமை பெற்றுள்ளவர்கள் மட்டும்தான் அங்கே நிலபுலன்கள் வைத்திருக்கலாம் என்பது அங்குள்ள சட்டம். உரிமை கிடைக்கப் பெறாதவர்களும், உரிமை பெறுவதில் தாமதப்படுபவர்களும் பர்மாவில் உள்ள சொத்து சுகங்களை இழக்க நேரிடும். இது போன்ற நெருக்கடி நிலைமையை வளர்க்கின்ற சட்டங்கள் இந்தியாமீது பர்மா கொண்டுள்ள பேரன்பின் பிரதிபலிப்பாக இல்லை. மாறாக, அன்புப் பாலத்தை தகர்த்தெறியும் வெடி குண்டுகளாக இருக்கின்றன. இந்நிலையை மாற்றி அமைக்க இதுவரை டில்லி எந்த வித முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை.

பர்மா வாழ் இந்தியர்கள் அனுபவிக்கும் அடுத்த தொல்லை உரிமை கோரி விண்ணப்பிக்காதவர்கள் நிலைமை பற்றியது. அவர்கள் பத்து லட்சம் பேரில் அறுபதினாயிரம் பேர் போக மீதியுள்ளோர்கள் அன்னியர்களாகவே கருதப்படுவார்கள். அதோடு அவர்கள் அன்னியர்கள் என்று பதிவு செய்தேயாக வேண்டும் என்று வற்புறுத்தப் படுகின்றார்கள். பதிவு செய்து கொள்வதென்பது கொள்கையளவில் ஓரளவு நியாயமே எனினும்கூட பதிவு செய்து கொள்வதற்குரிய கட்டணம் அதிகப் படுத்தப்பட்டுள்ளது. முன்பு 25 ரூபாயாக இருந்த கட்டணத்தொகை இப்பொழுது 50 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. அதோடு பதிவு செய்த பிறகு ஒவ்வோராண்டும் பதிவு செய்துள்ளதை

[தொடர்ச்சி பக்கம்—12]

தயாராகிறது!

சிங்காரி—மாப்பிள்ளை—உலகம் பலவிதம்—தூக்குத் தூக்கி ஆரவல்லி முதலிய வெற்றிப் படங்களின் வசன கர்த்தா

திரு. வி. என். சம்பந்தம் தீட்டிய

அம்மாமி சொன்ன கதை

(விலை ரூபாய் ஒன்று)

20-11-57 முதல் தமிழ்நாடெங்கும் விற்பனைக்குக் கிடைக்கும்.

தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. 1-25 முன் பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். விற்பனையாளர்களுக்கு தனி சலுகை உண்டு! விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி,
ஸ்ரீ தேவி பதிப்பகம்.
18, மந்தவெளித் தெரு, சென்னை—28.

சென்ற இதழ்களில் ..

- வரலாற்றுப் புகழ் பெற்ற 1024—ம் ஆண்டு......
- இந்து மதத்தின் இதயமும்—சனாதன தர்மத்தின் இரும்புக் கோட்டையும்—சிலை வழிபாட்டைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கும் தொட்டிலுமாகிய சோமநாதபுரத்து ஆலயத்தைத் தகர்த்தெறிவதற்குக் கோட்டைக்கு வெளியே முகாமமைத்திருக்கிறான் கஜினி முகம்மது......
- ஒரு நாள் காலை—கடலாடச் சென்ற இந்துப் பெண் புவனேஸ்வரியின் குழந்தையை ஓநாயின் வாயிலிருந்து மீட்கிறான். முகம்மதியன் ஒருவனால் தன் மகவு காப்பாற்றப்பட்டதை விரும்பாத அவளது கணவன் குழந்தையைப் 'பாப மூட்டை' என்கிறான். அவனோ க்ஷயம் பிடித்து சாவோடு போராடிக் கொண்டிருப்பவன்! புவனாவைச் சந்தித்தது முதல் அவளையே நாடுகிறது கஜினியின் உள்ளம்......
- மறு நாள் காலை—சரித்திரப் பேராசிரியனும் தன் அந்தரங்கக் காரியதரிசியுமான 'உட்பி'யை அழைத்துக் கொண்டு பாழடைந்த ரகசியக் குகை ஒன்றுக்குள் செல்கிறான் கஜினி! அங்கே ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் ஓலைச் சுவடிகளையும், கோட்டைக்குச் செல்லும் ரகசிய வழியையும் காணுகின்றனர்......
- புவனாவின் கணவன் மரண முகட்டுக்குச் சென்று விட்டான். "இனி என் மருந்தால் பலனில்லை; ஆண்டவனை அணுகிப்பார்!" என்று சொல்லுகிறார் மருத்துவர். 'பாப மூட்டை'யான தன் குழந்தைதான் பதியின் உயிருக்குக் 'கால'னானதோ என்று கலங்கி, குழந்தையைக் கொல்லத் துணிகிறாள் புவனா. அப்போது அங்கு வந்த சோமேசர் ஆலயத்துத் தலைமைப் புரோகிதனே அதைத் தடுத்து, ஆண்டவன் தரிசனத்துக்கு அழைக்கிறான், புவனாவை......

கணவன் பிழைத்து விடுவான்; தன் மாங்கல்யம் காப்பாற்றப்படும் — என்ற களிப்போடு சோமேசர் சந்நிதானத்துக்குச் செல்கிறாள் புவனா. தெய்வீகத் திரையின் பின்னே காமச் சேற்றில் புரளும் தலைமைப் புரோகிதன் அவளது கற்பை ஆண்டவன் சார்பில் காணிக்கையாகக் கேட்கிறான். இக்கட்டான நிலையில் எங்கிருந்தோ வந்த ஒரு சாதுவால் காப்பாற்றப்படுகிறாள் புவனா. தான் மதுராபுரிவாசி என்றும், தன் பெயர் நிர்மலானந்தன் என்றும் சொல்கிறார் சாது......

- தனிவழிசெல்லும் சாது பல்லக்கு ஒன்றையும், அதற்குள் பாவை ஒருத்தியையும் சந்தித்து, பின் தொடர்கிறார். இரவு நேரத்தில் அவளுக்கென்ன வேலை—என்று கண்டறிய விரும்பி, அவள் சென்ற வீட்டிற்குள் அனுமதியோடு நுழைகிறார். சாதுவை உபசரித்த அந்தப் பெண், தான் தேவதாசி என்றுசொல்லி, இந்து தர்மம் தன்னைப் போன்றவர்களுக்கு அளித்திருக்கும் சாக்கடை வாழ்வை வேதனையோடு விவரிக்கிறாள். —அவள் பெயர் திலோத்தமா.......
- அவளிடமிருந்து சாது விடை பெற்றுச் சென்றவுடன்புவனாவின் கணவனுடைய பிரேத ஊர்வலம் திலோத்தமாவின் வீட்டைக் கடந்து செல்கிறது. இந்து தர்மத்தின் ஈவிரக்கமற்ற சடங்கின்படி கணவனுடன் உடன்கட்டை ஏறிவிடுகிறாள் புவனா......
- போர் மூண்டு விடுகிறது. சேவகன் ஒருவன் இஸ்லாம் மதத்தை இழித்தும் பழித்தும் கூறிய சாது ஒருவனைக் கைது செய்திருக்கிற செய்தியைத் தெரிவிக்கிறான் கஜினியிடம்...
- மேலே படியுங்கள்...

10

கஜினி முகம்மதுவின் கண்களில் தீப்பொறி பறந்துகொண்டிருந்தது. கைது செய்யப்பட்ட சாது, அமைதி தவழும் முகத்தோடு புன்முறுவல் பூத்துக் கொண்டிருந்தான். இந்த சாதுவோ குடு குடு கிழம். தோலெல்லாம் சுருங்கிப்போய் விட்டது. விரதத்தால் உடலை வருத்தியதால் வற்றல்போல் இருந்தான். ஆனால் முகத்தில் ஆணவமும், புன்சிரிப்பில் அலட்சியமும் இருந்தன.

"டேய் பண்டாரம், உன் கதி என்னவாகப் போகிறது என்று தெரியுமா?" என்று சீறினான் கஜினி.

"தெரியும், நாஸ்திகத் தலைவரே! உயிருக்குப் பயந்து மதத்தைக் காட்டிக் கொடுக்கும் கோழைகளை இந்துஸ்தானத்தில் காண முடியாது என்ற உண்மையை இன்னும் நீர் அறியவில்லை போலிருக்கிறது," என்றான் சாது அலட்சியமாக.

"மதம்—கல்லையும் மண்ணையும் மரத்தையும் மட்டைகளையும் கடவுளென்று பூஜிக்கும் காட்டுமிராண்டி மதம்......உருவமற்ற ஆண்டவனுக்கு ஓராயிரம் உருவங்களைக் கற்பித்து, அந்த உருவங்களை உயிர்ப் பிண்டமாக்கி, அவற்றைச் சுற்றி ஆபாசக் கதைகளைக் கற்பனை செய்து, அதனால் வயிறு பிழைக்கும் ஒரு சில சூதுமதியினரின் சூழ்ச்சித் திட்டம்தான் உங்கள் மதம். டேய் பண்டாரம். உண்மையைச் சொல்லிவிடு; ஒற்றர் வேலை செய்யத்தானே உள்ளே நுழைந்தாய்?"

சாது பதில் சொல்லாமல் 'கட கட'வென்று சிரித்தான். "மன்னா, ஒற்றர் வேலை செய்துதான் நாட்டைக் காப்பாற்ற வேண்டிய அவல நிலையில் நாங்கள் இருப்பதாக நீர் எண்ணினால்; எங்கள் தெய்வத்தின் அதீத சக்திகளை நீர் அறியாமல் போய் விட்டீரே என்று அனுதாபப் படுகிறேன்! மேற்கு நாட்டிலிருந்து வந்திருக்கும் நீசர்களால் சோமேஸ்வரன் அழிந்துபோக, அவன் என்ன உம்மைப்போல், என்னைப்போல் வெறும் மனுஷ்ய ஜன்மமா? யாவற்றையும், நீர் உட்பட படைத்துக் காத்து அழித்து, தான்மட்டும் அழியாமல் நிற்கும் பரம்பொருளின் ரகசியத்தை நீசர்களின் தலைவனான நீ எங்கே அறியப் போகிறாய்......!"

"பண்டாரம். போதும் உன் சன்மார்க்கப் பிரசங்கம்...நீ ஏன் வந்தாய்? அதைச் சொல்!"

"ஏன் வந்தேனா? சொல்லுகிறேன் மன்னா! அகம்பாவத்தாலும், ஆணவத்தாலும் சோமநாதர் மண்ணில் அடியெடுத்து வைக்க எண்ணாதே! நீயும் உன்னுடைய ரத, கஜ, துரக, பதாதிகளும், சோமநாதரின் கொழுந்துவிட்டெரியும் கோபாக்னியில் எரிந்து சாம்பலாய்ப் போகிறீர்கள் என்பதை எச்சரிக்கவே வந்தேன்......என் கடமை முடிந்து விட்டது," என்றான் சாது.

"பைத்தியக்கார மக்கள்! டேய், பண்டாரம்! நீ சொல்வது உண்மையானால் உங்கள் கடவுள் முதலில் உன்னைக் காப்பாற்றட்டும்...தளபதி, இவனை அழைத்துப் போய், மதிற் சுவருக்கு வெளியே—இந்துக்கள் காணும் படியாக—கொடி மரத்தில் தூக்கிட்டுத் தொங்க விடுங்கள். இவன் உயிர் சோமநாதரின் பாதார விந்தங்களை அடைந்த பின், இவன் உடலைக் கூறுக்கி, கோட்டைக்குள் விட்டெறியுங்கள். சோமநாதரின் ஆற்றலை இவனும் இவனைச் சார்ந்தோரும் பரிசோதனை செய்ய நாமே ஒரு சந்தர்ப்பத்தை அளிப்போம்," என்றான் கஜினி.

போர் வீரர்கள் சாதுவைப் பிடித்து இழுத்துச் சென்றார்கள். "ஜெய் சங்கர், ஹரே சங்கர்!" என்று கோஷமிட்டபடியே, நேரவிருக்கும் பயங்கர தண்டனை பற்றி அச்சம் சிறிதுமின்றி சாது, போர் வீரர்களோடு சென்றான்.

கஜினி பெருமூச்சு விட்டான்!

"மகராஜ், வந்த ஒற்றனின் லட்சியம் நிறைவேறிவிட்டது," என்றான் உட்பி.

ஒன்றும் புரியாமல் கஜினி புருவத்தை நெறித்தான்!

"சாதாரணமான ஒரு பண்டாரத்தை ஒரு பெரிய மதத் தியாகி ஆக்கிவிட்டீர்கள்," என்றான் உட்பி.

"உட்பி, நீ கூறுவது உண்மைதான்...இவன் தியாகி ஆகப் போகிறான் என்பது உண்மை. ஆனால் இவன் உயிர்த் தியாகம் புதிய தியாகிகளை உற்பத்தி செய்யாது. இவனுக்கு நேரவிருக்கும் கதியை சோமநாதபுரத்துக் கடவுளால் காப்பாற்ற முடியவில்லை என்பதை அறியும் இந்துக்கள், கல்லிலே கடவுள் இல்லை என்பதை உணர்வார்கள்...இந்த உணர்வு இந்துக்களிடம ஏற்பட்ட மறு கணமே சோமநாதபுரத்தின் கோட்

[தொடர்ச்சி பக்கம்—8]

சாதிக்கு ஒரு மந்திரி— நீதிக்குப் பெரும் இழுக்கு!

[சாதி வெறியையும், அதனால் ஏற்படும் கொடுமைகளையும், அதை அழிக்க ஏற்றதோரு நல்ல வழியையும் விளக்கி சென்ற **30-10-57** அன்று சென்னை கோடம்பாக்கத்தில் அறிஞர் **அண்ணா** அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.]

ஐந்தாண்டுத் திட்டம் போல, இந்நாட்டில் சாதியை ஒழிப்பதற்கு ஒரு திட்டம் தேவை; இதை நான் சட்டசபையில்கூட எடுத்துச்சொல்ல இருந்தேன்—நேரமில்லாததால் சொல்லவில்லை.

இந்த நாட்டிலுள்ள தற்போதைய கிராம அமைப்பு முறையை மாற்றாவிடில் கொடுமைகள் நடந்தே தீரும். ஒரு கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட சாதி மக்கள் பெருவாரியாக இருந்தால் அவர்கள் மற்ற சிறுபான்மை மக்கள்மீது ஆதிக்கம் செய்யத்தான் முற்படுவார்கள்.

இதற்கு உதாரணமாக ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன் — சோழவந்தானில் 'முதலியார் கோட்டை' என்று ஒன்று இருக்கிறது; அது சாதாரணமாகக் களிமண்ணால் ஆன சுவர்தான்; அந்தச் சுவருக்கு உட்பக்கம் இருப்பவர்களெல்லாம் 'முதலியார்'கள்; அவர்கள் அந்தச் சுவரைத் தாண்டி வெளியே போக மாட்டார்களாம்; அப்படிப் போனால், மற்ற சாதிகளை அடக்கத்தான் போவார்களாம். இந்த நிலைமை இன்னும் சோழவந்தானில் இருப்பதைக் காண்கிறோம்.

சாதாரணமாக. 'முதலியார்' என்று சொல்லப்படுபவர்களே இப்படியிருந்தால், இன்னும் வீரகுணம் படைத்த மறவர்கள் எப்படியிருப்பார்கள்?

எனவே ஒரு கிராமத்தில் ஒரு சாதி மெஜாரிட்டி வகுப்பாக இருக்குமானால், அது மற்ற வகுப்பினரை அடக்கியாள—ஆதிக்கம் செலுத்தத்தான் செய்யும். இது அவர்களுக்குள்ள பலத்தினால் ஏற்படும் ஒரு ஆணவம்.

ஆகையினாலே, எந்த கிராமத்திலும் எந்த ஒரு குறிப்பிட்ட சாதியும் இன்னொரு சாதியினரை அடக்கியாளும்படியான மெஜாரிட்டியில்லாத வகையில் புதுக் கிராம அமைப்பு தேவை; அப்படிச் செய்தால் இத்தகைய சாதிச் சண்டைகள் ஏற்படாமல் தடுக்க முடியும்.

ஒரு குறிப்பிட்ட சாதியினரை இடம்விட்டு இடம் மாற்ற முடியுமா என்று கேட்பவர்களுக்கு நான் சொல்லுவேன் — தேவிகுளம் — பீர்மேட்டில் பட்டம் தாணுப் பிள்ளை என்ன செய்தார்? 'அப்பகுதியில் தமிழர்கள் மெஜாரிட்டியாகி விடக்கூடாது' என்று கருதி, ஏராளமான மலையாளிக்கு நிலமும் பணமும் கொடுத்து வீடு கட்டிக்கொண்டு குடியேறச் செய்தார்—அந்தப் பகுதியை கேரளத்துக்கு உரிமை கொண்டாடவே அவர் அப்படிச் செய்தார். ஆனால் அது தவறான முறை. அந்த முறை, ஒரு நல்ல காரியத்துக்குப் பயன்பட வேண்டுமென்று நான் கூறுகிறேன்.

இதை விடுத்து, சீர்திருத்தப் பிரச்சாரத்தினால் மட்டும் ஒன்றும் நடந்து விடாது. திலலை திட்சிதர் காலம்-நந்தனார் காலந் தொட்டுதான் சீர்திருத்தப் பிரச்சாரம் இந்த நாட்டில இருந்து வருகிறது.

இந்தச் சாதிச் சண்டைகள் இன்று நேற்று தோன்றியவையல்ல—நாளையோடு முடிந்துவிடக் கூடியவையுமல்ல. சாதிகளை இன்னும் நாட்டில் வைத்திருக்கும்வரை—அதை மாற்றும் திறன் சர்க்காருக்கு ஏற்படும்வரை அடுத்தடுத்து நடந்துகொண்டுதானிருக்கும் என நம்புகிறேன்.

இதைப் பற்றிப் பலர் பேசினாலோ, எழுதினாலோ, பொதுக் கூட்டத்தில் அலசினாலோ, புதுப் பகைதான் உண்டாகுமே தவிர—பாதிக்கப்பட்ட பகுதியிலே புதிபசிக்கலைத்தான் உண்டாக்குமே தவிர, அமைதியோ, அதற்கொரு மார்க்கமோ ஏற்பட்டுவிட முடியாது. எனவேதான், பொதுவாக எந்தச் சமுதாயத்தின்மீது நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம் என்பதை இந்த நேரத்தில் அதிகம் பேசக்கூடாது.

எதிர்க்கட்சிகளில் உள்ள நாங்கள் பல பிரிவுகளாக இருக்கிற காரணத்தால், ஒரு பிரச்னையை ஒன்றாகச் சேர்ந்து வலியுறுத்துவது என்பது முடியாத காரியம். இந்த அரசாங்கம் பலகொடுமைகளைச் செய்து வருகிறது; தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பளிக்கத் தவறி விட்டது. எனவே, இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்றோம். இப்பிரச்சினையை அணுகப் பல கோணங்கள் இருக்கின்றன. கட்சிகளிடையே தோழமையில்லாத காரணத்தால்தான் இவ்வளவு தொல்லைகள்.

போட்டிருந்த சலவைச் சொக்காயில் அழுக்குப் படிந்திருந்தால் குழந்தையைத் தகப்பன் திட்டுவான்; கன்னத்தில் அறைவான். கொஞ்சம்யோசனையுள்ள தகப்பனாக இருந்தால் 'நல்ல துணியைக் குழந்தை தானாக அழுக்காக்கிக்கொண்டிருக்குமா?' தன்னையறியாமல் சேறு படிந்திருக்கக் கூடும்' என்று கருதி, 'சேற்றை யார் போட்டார்கள்? ஏன் சேறுபடிந்தது?' என்பதைச் சிந்தித்திருப்பான். அவசரக்கார தகப்பன் மகனை அடிப்பான்; ஆர அமர யோசிக்கக்கூடிய தகப்பன் சேறு போட்டவனைக் கண்டிப்பான். 'சேறு யாரால் போடப்பட்டது? சாலையிலே சேறு இருக்கக் காரணமென்ன?' என்று அறிந்து, சாலையிலேயுள்ள குறைபாடுகளையும் கண்டிப்பான்.

இதைப்போல, பிரச்சினையை அணுகி, சிறு முயற்சிகளாவது எடுத்திருக்கிறார்களா சர்க்கார் என்று கேட்க விரும்புகிறேன்.

சாதி ஒழியவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் சொல்லவில்லை; சாதிகளை வைத்துக் கொண்டே பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாமெனக் கருதுகின்றனர்.

'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று கூறிய தேசியக் கவி பாரதியாரும், 'ஆயிரம் உண்டிங்கு சாதி; இதில் அன்னியர் புகலென்ன நீதி?' என்றுதான் சொன்னார். இங்கு ஏன் ஆயிரம் சாதிகள் இருக்கவேண்டுமென்று கேட்கவில்லை. இங்கு ஆயிரம் சாதிகள் இருக்கிறபடியே இருக்கும்; ஆனால், 'அன்னியர் இங்கு ஏன் வரவேண்டும்' என்றுதான் பாரதியாரும், தேசிய வாதிகளும் கேட்டனர்.

சாதிகளைத் தட்டிக்கொடுத்து தான் காங்கிரஸ் வளர்ச்சியடைந்திருக்கிறது. காங்கிரசில் இன்றும் சாதி தடித்திருக்கிறது. கொஞ்சம் மனக்கண்ணால் பாருங்கள்—சாதிக்கொரு மந்திரி என்றுதானே வைத்திருக்கிறார்கள்? திரு. காமராசர்கூட மந்திரியாவதற்கு முன்னால் 'காமராஜ்' என்று அழைக்கப்பட்டார். இப்பொழுது 'நாடார்' என்றுதானே அழைக்கப்படுகிறார்!

இன்னொரு மந்திரி—நாயக்கர்; இன்னொரு மந்திரி—முதலியார்; இப்படி மந்திரிகளைக்கூட சாதிப் பெயராலேதானே அழைக்கிறார்கள்? அமைச்சரவையே சாதிப் பெயரால்தான் இன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

நீதி அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்த நீதிக் கட்சியை இந்தக் காங்கிரஸ்காரர்கள் கிண்டல் செய்தார்கள்; 'சாதிக்கு ஒரு கட்சியா?' என்று கேட்டனர்.

இந்த அமைச்சரவையில் திருமதி லூர்து அம்மையாரும் ஒரு மந்திரி. அந்த அம்மையார் கண்ணியமும் திறமையும் வாய்ந்தவர்; மிக நல்லவர். **அவரைப்** பற்றி நான் குறைத்துப் பேச விரும்பவில்லை. ஆனால், நான் ஒரு காங்கிரஸ்காரரிடம் பேசிக் கொண்டிருந்தபோது, 'புதியவரான லூர்து அம்மையாரை ஏன் மந்திரியாக்கினார்கள்' என்பதற்கு அவர் காரணங்களைச் சொன்னார்—'அம்மையார் மிக்க திறமைசாலி; மந்திரி வேலைக்கான ஆற்றல் அவர்களிடமிருக்கிறது; அதனால்தான் அவரை மந்திரியாகப் போட்டார்கள்'—என்று அந்தக் காங்கிரஸ்காரர் கூறவில்லை; வேறு 4 காரணங்களைச் சொன்னார்—'அம்மையார் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவர்; புதிதாகத் தமிழ்நாட்டில் சேர்ந்த அந்தப் பகுதியினரைத் திருப்திப்படுத்தவும், அவர் பெண்ணாகையால் பெண் குலத்துக்குப் பிரதிநிதியாகவும், அதே நேரத்தில் கிறிஸ்துவ மதத்தினரைத் திருப்திப்படுத்தும் வகையிலும், ஆக இந்த 3 காரணங்களோடு, அம்மையார் 'அடக்கமானவர்' என்ற இன்னொரு காரணத்தையும் கூறினார்.

இந்தக் காரணங்களெல்லாம் 'இராஜதந்திர'த்தை எடுத்துக் கூற வேண்டுமானால் மதிப்பாக இருக்கலாம்; இதற்கு அடிப்படைக்காரணம் சாதிஎன்பதை மறுக்க முடியாது.

பைத்தியக்காரனை வீட்டிற்குள்ளே வைத்துக்கொண்டிருந்தால் துணி கிழியாமல் என்ன செய்யும்? 'கிழித்த துணிகளைத் தைத்துக் கொள்ளுவோம் நாம்' என்று கூறினால், நீங்கள் 'நன்றாகத் தையுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை; ஆனால், ஜாக்கிரதையாகத் தையுங்கள்; தைக்கும்போது விரலிலே ஊசியைக் குத்திக்கொள்ளாதீர்கள்' என்றுதான் கூறுகிறோம்.

சாதி இருக்கும்வரை முதுகுளத்தூர் நடக்கும்! தலைகள் உருளுவதும்; வெட்டு, குத்து நடப்பதும் நிற்காது.

ஆதித் திராவிடர்கள் நலத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி எவ்வளவு என்பதை ஏட்டிலே பார்த்தால் மயக்கம் போட்டுவிடக் கூடிய அளவுக்குப் பெருந் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். திட்டங்களெல்லாம் ஏட்டிலேதான் காட்டப்படுகின்றனவே யொழிய, நாட்டிலே பார்க்க முடிவதில்லை.

பாட்டாளி மக்கள் அத்தனை பேரும் பாழான நிலையை அடைந்திருக்கும்வரை இந்த ஆட்சியை நலலதெனக் கருத மாட்டார்கள். ஏட்டிலுள்ள திட்டங்களை நாட்டிலேகாட்டவேண்டும்; வறுமையால் குலைக்கப்படும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்யப்பட வேண்டும்.

சிறந்த சினிமா பத்திரிகை

"அமிர்தம்"

(மாதம் இருமுறை)

ஆசிரியர்: **பி. எஸ். இளங்கோ**

தனி இதழ் விலை அணா 2.

முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் விண்ணப்பிக்கவும்.

"அமிர்தம்"

172, முஸ்தோரா பேகம் பேட்டைத் தெரு. சென்னை—14

சென்னை விற்பனையாளர்:

நேரு நியூஸ் ஏஜன்சி, சென்னை—4.

முதுகுளத்தூராலும் 'முரளிஸ்கிப்'பாலும் அமளி ஏற்பட்ட பிறகுதான் கவனிக்கிறது சர்க்கார். பிரச்சினை கிளம்பும் போதே அதைப்பற்றி அக்கறை செலுத்துவதில்லை.

இனகுலேஷன், இன்செக்ஷன்—இந்த இரண்டும் ஊசி போடும் முறைகள்தான் என்றாலும், இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. நோய் வரு முன்னே தடுத்து நிறுத்துவது இனகுலேஷன்; நோய் வந்த பின்பு தடுக்கமுயல்வது இன்செக்ஷன்! இந்த சர்க்காருக்கு இன்செக்ஷன் போடத்தான் தெரியும்; நாங்கள், இனகுலேஷன் போட வேண்டும் என்கிறோம்.

தேள்கொட்டிய பிறகு அவதிப் படுவதைத் தடுக்க முயற்சிப்பதைவிட—முன்னமேயே, தேள் புகாத வீடு வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம்; ஆனால், 'தேள் கடி மருந்து ஏராளமாக வைத்திருக்கிறோம்' என்கிறது சர்க்கார்.

முதுகுளத்தூரிலே ஏற்பட்ட அந்த வெடிப்பு—வேதனைதரும் அந்த நிகழ்ச்சிகள் நமமை வெட்கித் தலை குனிய வைக்கக்கூடியவையாகும்; தமிழன் வரலாற்றிலே கறைபடியச் செய்யும் அருமை உண்டாக்கும் சம்பவங்களாகும்.

சாதி ஒன்று; 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்ற ஓசை, இனி ஒவ்வொருவர் உள்ளத்திலும், வாழ்க்கையிலும் ஒலிக்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் சாதி ஒழிய வேண்டுமென்று அச்சம்—தயை—தாட்சண்யமின்றி—பாடு படுகிறது.

பலாத்காரம் வேண்டாம்; வெட்டு, குத்து, கொலை இப்படிப்பட்ட செயல்களைத் தூண்டக்கூடியதாக உள்ள சாதிவெறியைச் சுட்டெரியுங்கள்; உடலை—உள்ளத்தைச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள் என்று நாங்கள் கூறுகிறோம்.

'சாதி பேதங்களை நீக்க வேண்டுமென்றால், சாதிகள் இன்று நேற்று உண்டானவை அல்ல; சாஸ்திரத்திலும் வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது' என்கிறார்கள் அடுத்தபடி, 'சாஸ்திரமும் பொய், வேதமும் பொய்' என்று நாங்கள் கூறவேண்டியிருக்கிறது; 'வேதத்தையா பொய் என்கிறீர்கள்? அது கடவுளால் அடியெடுத்துக் கொடுத்து எழுதப்பட்டதாயிற்றே!'—என்கிறார்கள்; 'அப்படியானால், சாதிகளை உண்டாக்கக் கூடிய அப்படிப்பட்ட ஆண்டவனும் இல்லை—இருக்க முடியாது' என்கிறோம். இப்படிக் கூறும் எங்களை 'நாஸ்திகர்கள்' என்று கூறுமலிருப்பார்களா?

நாங்கள் தி. மு. கழகம்-புகாத இடத்தில்தான் அந்த சாதி அரவம் பயங்கரப் படமெடுத்தாடி நாசவேலை செய்திருக்கிறது. கழகம் பரவியுள்ள இடங்களிலெல்லாம் சாதியின் பெயராலே எந்தத் தலையும் உருளவில்லை.

இந்த சாதி ஒழிப்பு ஒன்றிலாவது கட்சிபேதமின்றி—படித்த பாப்பனர்கள் உள்பட—அத்தனை பேரும் ஒன்றுகூடிப் பாடு பட வேண்டும்.

இன்னும் பல பேர்-வெட்கத்தோடு ஒப்புக்கொள்ளுகிறேன்-தங்கள் சாதி உணர்ச்சியை மறக்கவில்லை. பொது மேடையில் பேசும்போதும், கவிதை எழுதும்போதும், நாட்கமாடும் பொழுதும் சாதி ஒழிய வேண்டும் என்கிறார்களே தவிர, உள்ளத்திலுள்ள சாதியை மறக்கவில்லை. இதை நான் உள்ளத்தைத் திறந்து காட்டிச் சொல்கிறேன். உள்ளதை மறைத்துப் பயனில்லை; மறைத்து மறைத்துத்தான் இந்த நிலைக்கு வந்திருக்கிறோம்.

சீர்திருத்தப் பிரச்சாரம், தில்லை தீட்சிதர் காலத்திலே நந்தனர் தீயிலிட்டுப் பொசுக்கப் பட்டாரே—அந்தக் காலந் தொட்டுதான் இந்த நாட்டில் நடந்து வருகிறது.

இந்தப் பிரச்சாரத்தை எல்லாக் கட்சிகளும் செய்யவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். நல்ல அறிவுப் பிரச்சாரமும் செய்ய வேண்டும். இதைச் செய்தால் 'தலைவெட்டும்' தன்மையும், குடிசையைக் கொளுத்தும்' தன்மையும், 'காலித்தனமும்' தானே போய் விடும். சட்டசபையில் இது பற்றிப் பேசினால் மட்டும் போதாது.

தூங்கியவனைத் தட்டி எழுப்பியதுபோல் எழும்பி, நல்ல அறிவு தரும் சோதனையை முதுகுளத்தூர் சம்பவம் நமக்குத் தந்திருக்கிறது.

இன்று முதல் சாதியுணர்ச்சியைவிட்டு, அனைவரும் ஒன்று பட்டாக வேண்டும்; அவரவர்கள் சாதி சாதியாக ஒன்றுபடாமல், வேறொன்றில் ஒன்றுபட வேண்டும்; மொழியாலும், நாட்டாலும் ஒன்றுபட முடியாவிட்டால வேறு எதனால் ஒன்றுபட முடியும்? தமிழ்மொழி—திராவிட நாடு என்ற அளவில் எல்லோரும் ஒன்றுபட வேண்டும்.

'இந்தியன்' என்ற முறையில், ஒன்றுபடக் கூடாதா என்றால் தமிழர்கள் நித்தம் நித்தம் காதில் விழும் பெயரைவிட்டு, என்றோ ஒருநாள் சொல்லக்கூடிய 'இந்தியா' என்ற பெயரையா பதிய வைத்துக் கொள்ள முடியும்? 'அண்ணன்' பெயரே மறந்து விடுகிறது என்றால் 'அடுத்த வீட்டுக்காரனின் பெயரையும் நினைத்துக் கொண்டிருக்கவா முடியும்?

திராவிட இன உணர்ச்சியும், தமிழ் மொழியுணர்ச்சியும் வளர வளர, சாதியும் அதனால் விளையும் கொடுமைகளும் நிச்சயம் ஒழிந்து போகும். சாதி என்பது நாட்டுக்கும், நமக்கும், நமது அறிவுக்கும் 'மாசுபடுத்தும் அவமானச் சின்னம்' என்பதை உணர்ந்து அனைவரும் ஒன்றுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்'.

★ ★ ★

சண்டை ஓய்ந்தது!

சோமநாதபுரத்துச் சிலை ...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

டைக் கதவுகள் தானுக திறந்து கொள்ளும்...'' என்ருன் கஜினி.

''இந்துக்களின் மதப் பற்றை லேசாக மதிப்பிட்டுவிட்டீர்கள் ...சோமநாதபுரத்தில் ஆலயத்துப் புரோகிதர்கள் இறந்து போனவனின் ஆவியைப் பேச வைப்பார்கள்...மூட மக்களும் அதை நம்புவார்கள்...மதவெறி கண்களை மறைக்கக் கடும் போர் புரிவார்கள்...''

உட்பி சொல்லுவதிலும் உண்மை இல்லாமல் இல்லை என்பதை கஜினி உணர்ந்தான். கவசங்களை எடுத்துப் பூட்டிக் கொண்டு போர்க்களம் செல்லத் தயாரானுன். அவனுடைய முகத்தில் உறுதியும் நம்பிக்கையும் சேர்ந்து ஒளி வீசின. கவசங்களை அணிந்த பின் வேறு விஷயங்களைப் பற்றி எண்ண கஜினி முகம்மதுவிற்கு நேரமேது? உருவிய வாளும், உறுதியான நெஞ்சும் கொண்டு போர்க்களம் நோக்கிப் புறப்பட்டான்.

* * *

கஜினியின் கட்டளையை நிறைவேற்ற போர்வீரர்கள் சாதுவை இழுத்துக் கொண்டு போனுர்கள். சஞ்சலம் சிறிதுமின்றி சாது அவர்களுடன் சென்ருன். இஸ்லாமிய வீரர்கள் தூக்கிடப் படுவதற்காக அழைத்துச் செல்லப்படும் சாதுவைப் பார்த்து கைகொட்டிச் சிரித்துக் காறி உமிழ்ந்தார்கள். சாதுவோ அவர்களை லட்சியம் செய்யாமல் ''ஹரே சங்கர், ஜெய் சங்கர்!'' என்று கூவியபடியே சென்று கொண்டிருந்தான். மதிற்சுவரின்மீது நின்று கொண்டிருந்த இந்து சனுதனிகள் சாதுவின் கோஷத்தை எதிரொலித்து ஊக்கப்படுத்தினர்.

கொடி மரத்தின்கீழ் சாது கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். மரணத்தின் சந்நிதானத்திலும் அவன் காட்டிய மன அமைதி, இஸ்லாமிய வீரர்களையே திடுக்கிட வைத்தது. நபிகள் நாயகத்தின் அறிவுரைகளைப் பரப்ப அவர்கள்தான் ஆயிரக் கணக்கான மைல்கள் சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்து வந்திருக்கிருர்கள் என்ருல், இதோ; இந்து மதத்தின்மீது வைத்துள்ள பக்திக்காகச் சிரித்துக் கொண்டே உயிர் துறக்கத் தயாராக நிற்கிருனே இந்த சாது; என எண்ணியபோது அவர்களையுமறியாமல் அவனிடம் அவர்களுக்கு ஒரு மதிப்புத் தோன்றியது.

சாது, தூக்கிலிடப்பட்டான்! சோமநாதரின் திருநாமத்தை ஜபித்துக் கொண்டே அவனுடைய கடைசி மூச்சு காற்றிலே கலந்து மறைந்தது!

''அல்லாஹு அக்பர்!'' என்று இஸ்லாமிய வீரர்கள் வெற்றி கோஷமிட்டனர். ''ஹரே சங்கர், ஜெய் சங்கர்!'' என்று இந்துக்கள் வீர கோஷமிட்டனர். போர் புது வெறியோடு தொடங்கிற்று.

இறந்து போன சாதுவின் உடல் பல துண்டுகளாக்கப்பட்டு, மதிற் சுவரின்மீது வீசியெறியப்பட்டது. இந்து வீரர்கள் பயபக்தியோடு அந்த மாமிசத் துண்டங்களை எட்டிப் பிடித்துக் கொண்டார்கள். சாதுவின் துண்டிக்கப்பட்ட தலையை ஈட்டியில் குத்தி உயர ஏந்திப் பிடித்துக் கொண்டார்கள். இறந்துபோன சாதுவின் கண்கள் மூடாமலே இருந்தன. உணர்ச்சியற்ற அந்தக் கண்களிலிருந்துகூட மதப்பற்று ஜுவாலை விட்டுக் கொண்டிருந்தது. மரணத்தை மதியாத அந்த அலட்சியப் புன்னகை இன்னும் மறையாமலே இருந்தது. இந்து வீரர்கள் தங்களுடைய லட்சியத்தின் சின்னமாகவே அந்தத் தலையைக் கருதினர். வான்முட்ட கோஷங்களை எழுப்பிக் கொண்டே உடலற்ற அந்தத் தலையை சோமநாதபுரத்துத் தெருக்களில் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். பார்த்த மக்கள் சாது ஒருவருக்கு நேர்ந்த கதியை எண்ணி அச்சம் கொள்ளவில்லை; மாருக, சாது ஒருவருக்கு இப்படித் தீங்கிழைத்த வம்சத்தையே பழி வாங்க வேண்டுமென்று சூளுரைத்து, வெறியுணர்ச்சியோடு போர்க்கோலம் பூண்டனர். உயிருடன் இருந்து சாதிக்க முடியாத ஒன்றை, மரணத்தின் மூலம் சாதித்து விட்டான் சாது! கஜினிக்கு சாதுவின் மரணம் லாபத்தை அளிக்கவில்லை; எதிர்ப்பு அணியையே பலப்படுத்தியது.

சோமநாதபுரத்து மக்கள், கிடைத்த ஆயுதங்களை யெல்லாம் திரட்டிக் கொண்டு கிளம்பினர். என்றுமில்லாத வெறியோடு, இதுவரையில் சரித்திரமே காணுத அளவில் பயங்கரமான போரொன்று நடந்து கொண்டிருந்தது. இந்துக்களின் — அதிலும் குறிப்பாக ராஜபுத்திரர்களின் மூர்க்கத்தனமான போர், இஸ்லாமிய வீரர்களைப் பின் வாங்கி ஓடச் செய்தது.

இஸ்லாமிய வீரர்களை உற்சாகப்படுத்த கஜினியே களத்தில் வந்து உத்தரவுகளை வழங்கிக் கொண்டிருந்தான். ஆனுல், இந்துக்களின் கோபாவேசத்தை எதிர்க்க கஜினியின் உற்சாக மொழிகள் போதுமானதாக இல்லை. சோமநாதபுரத்தின் ஆலய மணி ஓங்கார நாதம் எழுப்பிக் கொண்டிருந்தது. மணியோசையில் சோமநாதரின் குரலையே நேரில் கேட்பதாக எண்ணி, புது எழுச்சியோடு இந்துக்கள் போரிட்டனர். இஸ்லாமியர்களை அபின் உருண்டை வெறி கொள்ளக் செய்தது போலவே, இந்துக்களை சோமநாதபுரத்து ஆலயப் பிரசாதம் வெறி கொள்ளச் செய்தது.

இரத்த வெள்ளத்தில் உடல்கள் மிதந்தன. இந்து—முஸ்லிம் இரத்தம் வேறுபாடின்றி ஒன்ருகக் கலந்து ஓடிக் கொண்டிருந்தது!

வாழ்க்கையின் ஒப்புயர்வற்ற லட்சியம் வெறும் கனவாகி விடுமோ என்ற பயம் மனதில் நிறைய, கஜினி பாசறைக்குப் போய், தனியாக அமர்ந்து சிந்தித்தான்.

மதில் சுவரின்மேல் இந்துக்கள் — கீழே இஸ்லாமியர்கள். நிலையைப் பொறுத்த மட்டில் இந்துக்களுக்கு சாதகமான நிலையே! அவர்களையும் கீழே வரும்படிச் செய்து விட்டால்...?

தளபதிக்கு ஆள் அனுப்பினுன் கஜினி. தளபதி வந்து சேர்ந்தான்.

''தளபதி, பாசறைகள் உடனே மாற்றியமைக்கப்பட வேண்டும்...பாசறைகள் பின்னுல் சென்றவுடன் படைகளும் பின் வாங்கட்டும்...நாம் தோற்ருேடுவதாக எதிரிகளை நம்ப வைக்க வேண்டும்! பிறகு... என்ன; திட்டம் புரிகிறதா?''

தளபதி தலையசைத்தான்!

கஜினியின் படைகள் பின் வாங்க ஆரம்பித்தன. இந்துக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். சாதுவின் மரணத்திற்காக சோமேசர் இஸ்லாமியர்களைப் பழி வாங்குகிருர் என எண்ணிப் பூரித்தார்கள். சோமநாதபுரத்துச் சிலையிடம் அவர்களுடைய பக்தியும் நம்பிக்கையும் பன்மடங்கு அதிகரித்தது.

ஆலயத்தில் விசேஷ பூஜை, ஆராதனைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. முடிவான வெற்றியே கிட்டிவிட்டதாக எண்ணி இந்துக்கள் போர் நிலையையும் மறந்து ஆலயத்தில் கூடினுர்கள்.

தோற்ருேடும் இஸ்லாமியர்களை விரட்ட ராஜபுத்திர வீரர்கள், கோட்டைக் கதவுகளைத் திறந்துகொண்டு வெளியே வந்தனர்.

கஜினி முகம்மது பாசறையில் நின்றபடியே வெற்றிப் புன்னகை செய்துகொண்டிருந்தான். ஆம்; இன்னும் சில் நாழிகைகளில் இஸ்லாமிய வீரர்கள் எதிரிகளை சம தரையில் சந்திப்பார்கள். சோமநாதபுரம் கோட்டையின் கதவுகள் தூளாக்கப்படும். அல்லாவின் ஆசிபெற்ற வீரர்கள் நபிநாயகத்தின் கோட்பாடுகளை ஒலித்துக் கொண்டே இந்துக்களின் புனித பூமியில் பவனி வருவார்கள். சனுதனிகளின் வீடுகள் சூறையாடப்பட்டு, தீக்கிரையாக்கப்படும். கஜினி பயங்கரமாகச் சிரித்தான்.

கஜினியின் கண்முன் எரிந்து கொண்டிருக்கும் சோமநாதபுரம் காட்சியளித்தது. நெருப்பின் நடுவே அந்தப் பெண்ணின்—ஓநாயின் வாயிலிருந்து குழந்தையை மீட்டானே, அந்தப் பெண்ணின்—அழகு முகம் காட்சியளித்தது.

கஜினி தன்னை மறந்தான். அந்தப்புரத்தில் அந்த அழகுப் புரு வந்து அடைக்கலம் புகுந்துவிட்டது போன்ற பிரமை அவனுக்குத் தோன்றியது...... அந்தப் பெண்ணின் நினைவு வந்தவுடனேயே எத்தனையோ பிரச்சினைகள் அவனுக்குக் கேள்விக் குறிகளாயின!

இஸ்லாம் சோமநாதபுரத்தில் மூட்டும் தீயில் அவள் எரிந்து சாம்பலாகிவிடக் கூடாது... சோமநாதபுரத்துச்சிலை உடைக்கப்படுவது எவ்வளவு முக்கியமோ; அவ்வளவு முக்கியம் அந்தப் பெண் காப்பாற்றப்படுவதும் என எண்ணிய கஜினி, போருக்குத் தலைமை தாங்கி சோமநாதபுரத்தை, நேரில் தானே சூறையாடப் புறப்பட்டான்.

இஸ்லாம் இடவிருக்கும் தீயிலிருந்து அந்தப் பெண்ணைக் காப்பாற்றப் புறப்பட்டான் கஜினி முகம்மது! ஆனுல் இந்து தர்மம் அவளுக்கு இட்ட தீயைப் பற்றி அவன் ஏதும் அறியான்!

மதப்போர் ஒன்றை நடத்தும் சமயத்தில்கூட கஜினி ஒரு மனிதனுகவே இருந்தான். சிலை வழிபாட்டை உடைத்தெறிந்து இஸ்லாமைப் பரப்ப வந்தவன், பொற்சிலை புவனுவின் கடைக்கண்வீச்சில் சிக்கித் தவித்தான். இந்துஸ்தானத்தில் அவன் பொன்னையும் பொருளையும் புதையலாகப் பெற்ருன்; கவிஞர்களையும் கலைஞர்களையும் அரசவைக் கருவூலங்களாக்கிக் கொண்டான்; ஆனுல் இவையெல்லாவற்றையும்விட, புவனுவைத் தன் இதயராணியாக்கிக் கொள்வதையே பெறற்கரிய பெரும் பேருகக் கருதினுன்.

இந்து மதத்தின் விரோதியும் இஸ்லாமின் காவலனுமான கஜினி முகம்மது ஒரு சனுதன இந்துப் பெண்ணின் மீது கொண்டுவிட்ட காதலைப் பார்த்து, காலதேவன் கைகொட்டிச் சிரிக்கவில்லை! மனவுணர்ச்சிகள் ஒன்றுபடுகின்றபோது, மதவுணர்ச்சி — இனவுணர்ச்சி ஆகிய யாவும் மாண்டு மறைந்தொழிந்து போகும் என்ற உண்மையை அறிந்தவனல்லவா அவன்?

கஜினி முகம்மதுவின் குதிரையும் மனமும் ஒன்ருேடொன்று போட்டியிட்டு வேகமாகச் சென்றுகொண்டிருந்தன. குதிரையின் குளம்போசைகூட 'அவள் எங்கே?' என்ற கேள்வியையே எழுப்புவதுபோல உணர்ந்தான் கஜினி முகம்மது!

அறிவிப்பு

கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் இதுநாறும் தமது நாடகங்களாலும், கலா நிகழ்ச்சிகளாலும் பொதுவாகத் தமிழ்க் கலைக்கும் சிறப்பாக நற்பணிகளுக்கும் பெரிதும் உதவி வந்ததை இந்நாடே அறியும்.

கலைவாணர் அவர்களால் உருவாகி, அவருடனேயே வளர்ந்து வாழ்ந்து வந்த என். எஸ். கே. நாடக சபாவினராகிய நாங்கள் இனிமேலும் பல நாடகங்களை நாடெங்கும் நடத்தி, அன்னாரின் தாராளமான பாதையிலே நடந்து வரத் தீர்மானித்திருக்கிருேம் என்ற நல்ல செய்தியை பொது ஸ்தாபனங்களுக்கும், மக்களுக்கும் இந்த அறிக்கையின் மூலம் தெரிவித்துக் கொண்டு நல்லாதரவுகளைப் பெரிதும் தர வேண்டுகிருேம்.

இங்ஙனம்,

என். எஸ். கே. நாடக சபா,

6, வெங்கட்டராமய்யர் தெரு, சென்னை—17.

பீப்... பீப்...

[... இரண்டாவது ஸ்பட்...க் என்று பெயர் பெற்ற செயற்கைச் சந்திரனின் உள்ளே அமர்ந்து உல்லாசமாக ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கும் 'சின்னச் சீமாட்டி'க்கும், அதை அனுப்பிய விஞ்ஞானித் தலைவருக்கும் கம்பியில்லாத் தந்தியின் மூலம் நடைபெற்ற அற்புதமான உரையாடல்தான் இது...]

விஞ்ஞானி: ஹலோ! சின்ன சீமாட்டியா? என்ன, சௌக்கியமா?

சீமாட்டி: பீப்...பீப்...

விஞ்: அட; பதில் சொல்லுன்னு?

சீமா: பீப்...பீப்...பீப்...

விஞ்: எவ்வளவு உயரத்திலே நீ பறந்து கொண்டு இருக்கிறாய்? 900-மைலை அடைந்து விட்டாயா?

சீமா: பீப்...

விஞ்: சூ!...சும்மா 'பீப்...பீப்'—என்று விளையாடிக்கொண்டிருந்தால் உணவுக்காக அடிக்கும் மணியை நிறுத்தி விடுவேன்...உண்மையைச் சொல்லு...நீ எப்படி யிருக்கிறாய்?

சீமா: பரவாயில்லை...ஆனால் கொஞ்சம் ஜலதோஷம்!

விஞ்: பயப்படாதே; சீதோஷ்ண நிலை மாறியதால் அப்படி இருக்கும்...எப்படி சுற்றிக் கொண்டிருக்கிறாய்?

சீமா: ஒரே நிலையாகத்தான் சுற்றிக் கொண்டிருக்கிறேன். நேற்று ஒரு கிரகத்தின்மீது மோதிக்கொள்ளப் பார்த்தேன்...அய்யோ...அம்மாடியோவ்...

விஞ்: என்ன அது? என்ன நடந்தது?

சீமா: ஒன்றுமில்லை; ஒரு எரிகல் என்மீது மோதப் பார்த்தது; நல்ல வேளை, நகர்ந்துகொண்டேன்!,

விஞ்: ஆமாம்; நீ இருக்கிற செயற்கைச் சந்திரனிலிருந்து வருகிற 'பீப்பீப்' சப்தத்தைப் பற்றி இந்தியாவிலே என்ன பேசிக் கொள்கிறார்கள் தெரியுமா?

சீமா: என்ன பேசிக்கொள்கிறார்கள்?

விஞ்: மறைந்த அகில உலக நாதசுரச் சக்கரவர்த்தி திருவாளர் டி. என். ராஜரத்தினம் அவர்கள்தான் மேல் உலகத்திலிருந்து தியாகையர் கிர்த்தனையை ஆலாபனை செய்கிறார்; அதனால்தான் 'பீப் பீப்' சப்தம் கேட்கிறது—என்று பேசிக் கொள்கிறார்கள்!

சீமா: அது கிடக்கட்டும்; என் இனத்தவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்?

விஞ்: உன் இனத்தவர்களா? யார் அது?...ஓகோ! நாயைப் போல் நன்றியுள்ள மனிதர்களைக் கேட்கிறாயா? அப்படி யாரும் ஒரு ஜீவன்கூட இந்தப் புவியில் கிடையாதே!

சீமா: அதைப்பற்றிச் சொல்லவில்லை, அய்யா!...எங்கள் நாய் ஜாதியைப் பற்றிக் கேட்கிறேன்...

விஞ்: என்ன குறுகிய மனப்பான்மை உனக்கு? இவ்வளவு உயரத்தில் இருந்தும் இன்னமும் உனக்கு ஜாதிப் பித்து போகவில்லையா?

சீமா: நானும் ஜாதிப் பித்து இல்லாமல்தான் இருந்தேன். ஆனால் நேற்று முதுகுளத்தூர் ஜாதிச் சண்டையின் போது ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் அல்லவா; அப்போது பூமியிலிருந்து புறப்பட்ட அவர்களது ஆவி இப்போது என்னைத் தாண்டிச் சென்றது. அவர்களைச் சந்தித்ததும் எனக்கு என் ஜாதி அபிமானம் தோன்றி விட்டது! ஆமாம்; என் ஜாதிக்காரர்கள் எப்படி இருக்கிறார்கள்?

விஞ்: வழக்கம்போல குரைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்! நீ ஒருத்திதான் முன்னேறினாயே தவிர; உன் இனம் இன்னமும் தெருவிலே கல்லடிபட்டுக் கொண்டுதான் இருக்கிறது!

சீமா: அது கிடக்கட்டும்...... எனது பெரும் பயணத்தைப் பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள்?

விஞ்: ஓ, அதுவா? கம்யூனிச எதிர்ப்பாளர்கள் இப்போது கேவலம் நாயின் துணையைத் தேட ஆரம்பித்திருக்கிறார்கள். எப்படி ஒரு நாயைத் துன்புறுத்தலாம் என்று அவர்கள் கேள்வி கேட்கிறார்கள்!

சீமா: கிடக்கட்டும்......இந்தியாவிலிருந்து சோதனைக்காக ஏராளமான குரங்குகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியானபோது அமைதியாக இருந்த அவர்கள் இப்போது மட்டும் ஏன் குரைக்கிறார்களாம்...? ஆமாம்; இந்தியாவிலே என்னைப்பற்றி என்ன பேசிக்கொள்கிறார்கள்?

விஞ்: ரொம்பவும் விந்தையாகப் பேசிக் கொள்கிறார்கள்... என்ன இருந்தாலும் எம்பெருமான் அந்தக் காலத்தில் பைரவனை ஏன் வாகனமாகத் தேர்ந்தெடுத்தான்? அதன் தாத்பரியத்தைத் தெரிந்து கொண்டுதான் ரஷ்யர்களும் இப்போது ஒரு பைரவியை (அதாவது பெண் பைரவரை) மேல் உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்; நாஸ்தீகராயிருந்தாலும், ரஷ்யாள் எல்லாம் ஆஸ்தீகத்தின் ரகசியத்தைப் புரிந்தவர்கள் அல்லவா என்றெல்லாம் அவர்கள் பேசுகிறார்கள்!

சீமா: ஆகா; ஆகா! என்ன இருந்தாலும் என் ஜாதிக்கு மதிப்பளிப்பவர்கள் இந்தியர்கள்தான்! நேற்று ஒரு விசேஷம் நடந்தது தெரியுமா?

விஞ்: என்ன்? என்ன?

சீமா: தேவரும் மூவரும் இங்கு கூட்டமாக வந்து என்னை வேடிக்கை பார்த்தார்கள்! ஸ்ரீமான் எமன்கூட வந்திருந்தார்!

விஞ்: அவர்கள் என்ன சொன்னார்கள்?

சீமா: எமன்தான் என்னிடம் பேசினார். என்னிடம் ஒரு விண்ணப்பம்கூட அவர் கொடுத்தார். அதாவது; "பல நாட்களுக்கு முன்பு முதுகுளத்தூரிலிருந்து கிளம்பிய தேவர்; ஆதித் திராவிடர் பெருமக்களது ஆவியைப் பிடித்துக் கொண்டு என்னுடைய தூதுவர்களது எருமைக்கடா வாகனம் இன்னமும் வந்துசேர்ந்தபாடில்லை. நீ மட்டும் எப்படி இங்கு வந்து சேர்ந்தாய்? தயவு செய்து உன்னுடைய ராக்கெட் ரகசியத்தை என்னிடம் கூறு. இனிமேல் அந்த ராக்கெட்டிலேயே எருமை

[தொடர்ச்சி பக்கம்—12]

ஐயோ, பாவம் !



செயற்கைச் சந்திரன் இப்போது பூமியைச் சுற்றி வருகிறதல்லவா; டி. டி. கே. யின் சுற்றுப் பயணமும் இப்படித்தான் இருந்தது—என்று வர்ணிக்கிறது 'சங்கார்ஸ் வீக்லி'!

[இப் பகுதியில் மதிப்புரைக்காக புத்தகம் அனுப்புபவர்கள், தயவு செய்து இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டுகிறோம்.]



ஏடுகள் சொல்வதுண்டோ?

ஆசிரியர்: ஸ்ரீரங்கம் ராமகிருஷ்ணன்

ஆறு சிறு கதைகளின் தொகுப்பாக இந்நூலை வெளியிட்டுள்ளார்கள். ஏடுகள் சொல்வதுண்டோ, தாய், சம்மானம், பழி ஆகிய நான்கு கதைகளிலும் கருத்தாழம் செறிந்த கதையம்சமும் கற்பனை வளம் நிறைந்த வர்ணனைத் திறனும் மேலோங்கி விளங்கக் காண்கிறோம். உள்ளத்தை உருக்கும் உயரிய நிகழ்ச்சிகளைத் தெள்ளிய சொல்லோட்டத்துடன் கூடிய உயிரோவியங்களாய்த் தீட்டியுள்ளார் ஆசிரியர். எனினும் மற்ற இரு கதைகளிலும் கருப் பொருளின்மையால் வெறும் சொல்லடுக்குகளால் ஆன தத்துவச் செய்திகள் புரிந்து கொள்ளவும் ரசிக்கவும் அரியனவாய் அமைந்துள்ளன. ஆனால் அவற்றிலும் உயிரூட்டம் மிகுந்து தான் விளங்குகின்றது.

விலை ரூ. 2

கிடைக்குமிடம்:

மங்கள நூலகம், நுங்கம்பாக்கம்,
சென்னை-6.

சரபோஜிக்கோட்டை சதி

எழுதியது: "மேதாவி"

இராணுவப் பாதுகாப்போடு கூடியிருந்த சரித்திரத் தொடர்பு கொண்ட சில நகைகளை ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் நன்றாகத் திட்டமிட்டுக் கொள்ளையடித்து விடுகின்றார்கள். வழக்கம்போல் துப்பறிவோரின் திறமையால் யாவும் கண்டு பிடிக்கப்படுகிறது. இதிலுள்ள புதுமைகள் என்னவென்றால், இந்தக் கதையில் துப்பறிவது ஒரு பெண். கதையின் இறுதியில் திருமணம் புரிந்து கொள்ளும ஒரு இராணுவ அதிகாரியும், பெற்றோர் யாரென்று தெரிந்து கொள்ளாமலிருந்த ஒரு செல்வியும் கதையில் அவ்வளவு முக்கியத்துவமில்லாத கதாநாயகர்களாக யிருக்கிறார்கள். இவர்களைத் தவிர மற்ற மனிதர்கள் நிறைய வந்து போகிறார்கள். ஏதேதோ சம்பவங்கள் ஏராளம் நடைபெறுகின்றன. தமிழ் நாட்டுப் பெயர்களாய் இருப்பதால் மட்டுமே இங்கு நடந்தவையென்று நம்ப முடியாத அளவில்தான் கதைப் போக்கும் உரையாடல்களும் உள்ளன.

பக்கங்கள் அதிகமிருந்தாலும் சலிப்புத் தட்டாமல் கதை ஓடுகிறது. ஆசிரியரின் அந்தத் திறமையைப் பாராட்டத்தான் வேண்டும். விலையும் குறைவாகவே தோன்றுகிறது.

விலை ரூ. 1—50

வெளியீடு:

பிரேமா பிரசுரம்,
கோடம்பாக்கம், சென்னை-24.

மாணவர் விழா மலர்

'சிறந்த குணச் சித்திர நடிகரான திரு. எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்களின் சீரிய முயற்சியிலும், மேற்பார்வையிலும் நாடகக்கலை வளர்ச்சிக்கு பணியாற்றிவந்த 'சேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலையம்' கலையுலகத்தின் ஒருமித்த பாராட்டைப் பெற்ற ஓர் அமைப்பாகும்.

அந்த வளரும் கலைக்கூடம் தன்னுடைய மூன்று மாத பயிற்சியை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, அதன் நினைவாக இந்த மாணவர் விழா மலரை வெளியிட்டிருக்கிறது. இந்த நினைவீதியிலே திருவாளர்கள் டி. கே. சண்முகம், பி. எஸ். இராமையா, எஸ். வி. எஸ்., குமாரி சாந்தி—ஆகியோரும், இதர மாணவர்களும் சிறந்த கட்டுரைகளை வடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

நாடக வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவராலும் பாராட்டுக்குரியது திரு. எஸ். வி. எஸ். அவர்களின் இந்த முயற்சி.

விலை அணா எட்டு.

கிடைக்குமிடம்:

சேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலையம்,
சென்னை-14

★ ★ ★

பிறைவானம் ....

[11—ம் பக்கத் தொடர்ச்சி]

கொடி சிரித்தது! ஒரே சிரிப்பொலி!

ஆனால், கடலோ 'கோ' வென்று அழுதது; அதற்கு உண்மையிலேயே இப்போது அழுகை வந்து விட்டது!

★

கடல் அழுததல்லவா; அதைக் கண்டு மேகத்திற்கும் அழுகை வந்து விட்டது. இரண்டும் சொந்தக்காரர்கள் தானே! உடனே மேகத்தின் முகம் கருத்தது. இருட்டு படர்ந்தது. மேகம் அழத் தொடங்கி விட்டது! 'சோ' வென்று மழை பெய்யத் துவங்கிவிட்டது!

"வேண்டாம்; வேண்டாம்; அழாதே!" என்று தொண்டை கிழியக் கத்திப் பார்த்தது இடி! மின்னலும் 'பளிச், பளிச்' சென்று வேடிக்கைக் காட்டியது! ஆனால் அழுகை நிற்கவில்லை--மேகம் ஒப்பாரி வைத்து அழுதது!

வானம் பொத்துக் கொண்டதுபோல் மழை வலுத்து விட்டது. ஒருநாள் அல்ல; இரண்டு நாளல்ல; இரவு பகலென்று பாராது தொடர்ந்து பெய்து கொண்டேயிருந்தது!

"இதென்ன இவ்வளவு கோர மழை! நாத்திகம் வளர்ந்து விட்டது—அதனால்தான் வருண பகவானுக்குப் பொல்லாத கோபம்! இப்படி நீரை வாரி இறைத்து ஆத்திரத்தைத் தணித்துக் கொள்ளுகிறார்!" என்று சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு குற்றப் பத்திரிகை வாசித்தார்கள், புராணிகர்கள்!

"ஐயையோ! இதென்ன கொடுமை! எங்கள் குடிசை எல்லாம் மழையில் போயிற்றே! ...ஏ, அரசாங்கமே! 'எங்கள் அரசாங்கமே'! என்ன செய்யப் போகிறாய்?" என்று ஏக்கத்தோடு அலறினார்கள் ஏழைப் பெருமக்கள் — குடிசை வாழ் 'இந்நாட்டு மன்னர்கள்'!

"எச்சரிக்கை விடுத்திருக்கிறோம்! நடுக் கடலில் புயல் சின்னம் உருவாகிவிட்டது! கவனம்! கவனம்!!" என்று 'அபாய அறிவிப்பு' வெளியிட்டது சர்க்கார்!

ஊர் பயந்து கிடந்தது!

மக்கள் உறங்கிக் கிடந்தனர்—இல்லை; இல்லை; உறங்கியது போலத் தோன்றினார்களே தவிர—விழிகளில் நீரையும், நெஞ்சிலே 'என்ன நேருமோ' என்று ஏதும் புரியாத வேதனையையும் தாங்கி—வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தார்கள்!

கட்டிடம் அமைதியாக இருந்தது!

கடல் குமுறிக் கொண்டிருந்தது! அதன் அலை ஓசை உரத்தக் குரலில் எழும்பிக் கொண்டிருந்தது! அது அழுகிறதா? இல்லை; கட்டிடம் சொல்லியது போல அது அழவில்லை; சிரித்துக் கொண்டிருந்தது! அதோடு வலுச் சண்டைக்கு வந்த கட்டிடமும்—அது வக்காலத்து வாங்கிய பொல்லாத பூமியும் படும் தொல்லை கண்டு அது சிரித்துக் கொண்டுதான் இருந்தது!

"புயல் கரை நோக்கி நெருங்கி விட்டது!"—சர்க்கார் அறிக்கை பறந்தது!

அலை ஓசை அதிகமாகத்தான் இருந்தது!

"சீ; சீ! ஏ, கருப்புக் ச... ஏன் இப்படிச் சிரி...றாய்? அழிந்து போவாய்! அழிந்து போவாய்!" என்று தூற்றியது கட்டிடம்!

கட்டிடத்தின் அழகான—பளபளப்பான - பெருமைபடத்தக்க —பொறுமையை ஊட்டிவிட்ட—மஞ்சள் வர்ணம், மழை நீரிலே கரைந்து கொண்டிருந்தது!

கட்டி முடிக்கப்படாத அதன் பதினேழாவது மாடி ஆட்டம் கண்டு கொண்டிருந்தது! ஆனாலும் சீறியது, கடலை நோக்கி!

"பாதாளத்தில் கிடக்கும் கடலே! எங்கே நிமிர்ந்து எழுகிறாய்? நான் வசிக்கும் பூமியின் காலடி உன்னை நசுக்கிக் கொண்டேதான் இருக்கும்!..."

"சோ" என்ற பெருங்காற்று, புயலாய்—பிரளமாய்—வீசியது!

மழை புதுவேகம் பெற்று பொழிந்தது!

கடல் வழக்கம்போல் இரைந்து கொண்டே இருந்தது!

கட்டிடமும் கர்வத்தால் புலம்பிக் கொண்டே இருந்தது!

புயல் வலுத்தது! என்ன நேருமோ — ஏதாகுமோ என்ற மக்களின் பயத்திற்கிடையே புது பலத்தோடு வீசியது; கடல் கொந்தளித்தது!

ஒரே குழப்பம்—குலைவு!

★

பொழுது விடிந்தது...

கடலில் பழைய கொந்தளிப்பு இல்லை! வழக்கம்போல் அலை ஓசை மட்டுமே எழும்பிக்கொண்டிருந்தது!

ஆனால் வழக்கமாக எழும்பும் கட்டிடத்தின் பொறாமைக் கூச்சல் அப்போது இல்லை—ஏன்; கட்டிடமே அங்கு இல்லை!

தூள் தூளாகச் சிதறிவிட்ட கட்டிடத்தைக் 'கபளீகாரம்' செய்துவிட்ட அமைதியிலோ என்னவோ—பொங்கித் தணிந்த கடல் களைப்பாகக் காணப்பட்டது!

கடற்கரை யோரத்தில் சிதறிக் கிடந்த பொருள்களுக்கு இடையே ஏதோ ஒரு ஏட்டை உன்னிப்பாகக் கவனித்தன கடலின் கண்கள்! சீர்குலைந்த கட்டிடத்திலிருந்து கிடைத்த ஏடுதான் அது; அந்த எழுத்துக்களைப் படித்தது கடல்!

"தன்னைத்தான் காக்கின்
சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

ஆனால், வள்ளுவரின் இந்தப் பாடத்தை உணர்ந்து கொள்ள வேண்டிய கட்டிடம் இப்போது இல்லையே! அதை நினைத்த போது கண்ணீர் விட்டது, கருணையே உருவான அந்தக் கருப்புக் கடல்!

—சொர்ணம்

OOOOOOOOOOOOOOOOOOOOOOOOO

முரசொலி
புதிய சந்தா விபரம்

உள் நாடு
ஆண்டு சந்தா 8—00
ஆறு மாதம் 4—50

வெளி நாடு
ஆண்டு சந்தா 9—00
ஆறு மாதம் 5—00

[சந்தாத் தொகையை கிராஸ் செய்த இந்தியன், பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ, மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மூன்று மாத சந்தா கிடையாது.]

—நிர்வாகி

OOOOOOOOOOOOOOOOOOOOOOOOO

கடலும் கட்டிடமும்!

சிங்கத் தம்பிகளே!

தங்கத் தங்கைகளே!

நான் இப்போது ஒரு புதிர் போடப் போகிறேன்—எங்கே, விடை சொல்லுங்கள்; பார்ப்போம்:

உலகில் எப்போதும் தூங்காமல் இருப்பது எது?

என்ன விழிக்கிறீர்கள்?

நீங்கள் தூங்குவீர்கள்; நான் தூங்குவேன்; நீங்கள் வசிக்கும் தெரு தூங்கும்; ஊர் தூங்கும்; உலகமே தூங்கும்; மரம், மட்டைகள்கூட சில நேரம், அசைவற்று நின்றுவிடும்; ஆனால் தூங்காதது எது?

பணமே உயிர் என்று எண்ணும் கஞ்சப் பிரபுவும் இரும்புப் பெட்டியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாவது கண நேரம் தூங்குவான்; கைதியைக் காவல் புரியும் கடமை வீரன்கூட சோர்ந்துபோய் குறட்டை விட்டு விடுவான்; ஆனால் தூங்காத அந்த ஒன்று எது?

'ரஷ்யாவின் இரண்டாவது சந்திரனும் உலகைச் சுற்றி வருகிறதே; என் தலையும் சுற்றத் துவங்கி விட்டதே!' என்று துடி துடிக்கும் அமெரிக்க அதிபர் ஐசன்ஹோவருக்குக்கூடத் தூக்கம் வரும்; அந்த செயற்கைச் சந்திரனிலே அடைபட்டு ஆயிரம் மைலுக்கு அப்பால் வான வீதியில் பவனி வருகின்ற நாய் கூட தன் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற பயத்தை மறந்து சிறிது நேரம் தூங்கலாம்; ஆனால் எப்போதும் தூங்காத அந்த ஒன்று எது?

அதோ, சப்தம் கேட்கிறது—காதில் விழுகிறதா?

நன்றாக காதைத் தீட்டிக் கேளுங்கள்; 'ஓகோ' என்று கூச்சலிடுகிறதே—ஓயாமல் ஓலமிடுகிறதே; தெரிகிறதா? கடல்—ஆமாம்; அந்தக் கடல்தான் தூங்காது; தூங்கவே தூங்காது! கத்தும்; கத்திக் கொண்டேயிருக்கும்! இரவு; பகல் — மழை; வெய்யில்—கோடை; குளிர்—எதைப்பற்றியும் அது கவலைப்படாது; எப்போதும் கதறிக் கொண்டேயிருக்கும்; ஓய்வின்றி ஓங்கார ஓசை எழுப்பிக் கொண்டேயிருக்கும்!

"ஏன்?"

அதோ, அதே கேள்வியை வேறு ஒரு குரல் எழுப்புகிறதே!

கடல் பேசவில்லை; ஓசையும் நிற்கவில்லை!

"ஹா...ஹ்...ஹ்... ஹா....ஹா... ஹா..."—ஏளனச் சிரிப்பொலி எழுகிறது; அலை ஓசையையும் மீறிக்கொண்டு எழுகிறது!

"ஏ, கடலே! கத்தும் கடலே! ஏன் இப்படி அலறுகிறாய்? ஊர் அடங்கி இருக்கிறதே; அந்த அமைதியை ஏன் குலைக்கிறாய்?" தம் புதிய கட்டிடம்தான் அப்படிக் கேட்கிறது!

கடல் அப்போதும் பேசவில்லை.

"துஷ்டக் கடலே! நீ கத்தவில்லை; அழுகிறாய்; என்னைப் பார்த்து அழுகிறாய்: நான் நிமிர்ந்து நிற்கும் இந்த பூமியைப் பார்த்து அழுகிறாய்! உனக்குப் பொறாமை! பொல்லாத பொறாமை!..."—கட்டிடம் மீண்டும் சிரித்தது.

கடலுக்கு இப்போது கோபம் வந்திருக்கத்தான் வேண்டும். 'உஸ்...' என்று ஒருமுறை பெரிய அலை ஓசையை எழுப்பியது!

"பார்த்தாயா; பார்த்தாயா? பெருமூச்சு விடுகிறாய்! அது ஏக்கப் பெருமூச்சு! ஏமாற்றப் பெருமூச்சு! அட, பொறாமைக்காரப் 'பூதமே'!..."

கட்டிடம் பேசிக்கொண்டே போவதற்குள் கடல் இடைமறித்தது. "நிறுத்து!" என்று கத்தியது, "பொறாமையா? எனக்கா? ஏன் இப்படி அபாண்டம் சொல்கிறாய்? நான் என்ன உன்னைவிடத் தாழ்ந்து விட்டேன்—சொல் பார்க்கலாம்?"—கடல் கோபத்துடன் பேசியது.

"என்ன தாழ்ந்து விட்டாயா? இதுகூடவா தெரியவில்லை? ஒன்றா; இரண்டா? எல்லாவகையிலுமே நீ எனக்குக் கீழேதான் கடலே; என் காலடியிலேதான்! முதலில் உன் உடலின் நிறத்தை எடுத்துக்கொள்! கண்ணாடியில் தான் பாரேன்—கருப்பு—அடுப்புக் கரியிலும் கீழான கருப்பு நீ! உடனே அதே கண்களால் என்னைப் பார்—மாலை மஞ்சள் வெயில்போல தகதகவென மின்னுகிறது என் தங்கம் நிகர் மேனி! இதுமட்டும் போதாதா; உன் பொறாமைக்கு மொத்தமான ஒரே காரணம்...!"—கட்டிடம் குற்றச்சாட்டு சுமத்தியது; தன் மேனியை ஒருமுறை கர்வத்தோடு பார்த்துக்கொண்டது.

"ஏ, கட்டிடமே! நீ வசிக்கும் பூமியே! நான் கருப்புதான்! ஆனால் என் உள்ளம் வெள்ளையானது; பாலினும் தூய்மையானது. அங்கே துரோகத்திற்கு வழியில்லை; துஷ்டர்களுக்கு இடமில்லை...என் வயிற்றிலே விலை மதிக்க வொண்ணாத முத்துக்கள் இருக்கின்றன; பளபளக்கும் பவழம் இருக்கிறது! அதைத்தான் உன் பூமியைச் சேர்ந்தவர்கள் திருடிக்கொண்டு போகிறார்கள்; பகல் கொள்ளையடிக்கிறார்கள்! அது மட்டுமா? ஐயோ, நான் என்ன சொல்வேன்; அவர்கள் கொலைகாரர்களாவுமன்றோ மாறிவிடுகிறார்கள்! என் பிள்ளைகளை—என் உடலிலே தவழ்ந்து விளையாடும் மீன் குழந்தைகளைப் பிடித்துப் போகிறார்களே; துடிக்கக் கொல்கிறார்களே; ருசித்துத் தின்கிறார்களே—இருதயமில்லாத கொடிய மனிதர்கள்...!"

"சீ!" என்று சீறியது கட்டிடம்! "என்ன தைரியம் உனக்கு? உலகத்தை நிந்திக்கிறாயே! பதினேழு மாடிகள் கொண்டு வானத்தைத் தொட்டு நிற்கின்ற என்னிடம் இப்படிப் பேச உனக்கு என்ன தைரியம்? எழும்பி எழும்பி அடங்கும் ஏ, அடிமைப் பதரே! உனக்கு என்ன வாழ்வு வந்துவிட்டது?'.

"எனக்கு என்றுமே தாழ்வு கிடையாது, தெரியுமா 'சிமெண்டால்' ஆன பிண்டமே! என் உலகில் சூதுக்கும் வாதுக்கும் இடமில்லை; சூழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் வழியில்லை! ஆனால் உன்னிடமோ ... துரோகிகள்; குடிகேடிகள்; அண்டிக் கெடுக்கும் அபாயப் பிறவிகள்...எத்தனை... எத்தனை! "வாழ்க நீ! வளர்க நீ!" என்று வாய் 'ஜே' கோஷம் முழக்கும்; ஆனால் கரங்களோ கண்ணுக்குத் தெரியாமல் பின்னாலேயே படுகுழிப் பறிக்கும்!... "அடடா! இவ்வளவு தூரம் எனக்காக வந்திருக்கிறீர்களே! களைப்பு அதிகமிருக்குமே; 'காபி' கொண்டு வருகிறேன்" என்று கருணை ததும்பப் பேசி, பானத்தை நீட்ட, அதில் பதுங்கி இருக்கும் விஷம்! ஆமாம்; ஆலகால விஷம்—ஆட்கொள்ளி! இத்தகைய நம்பிக்கைத் துரோகிகளை என்னிடம் காட்ட முடியுமா நீ?..."

"என்ன?..."—கட்டிடம் கர்ஜித்தது!

"அதுமட்டுமா? உன்னிடம் தான் எத்தனை அழிவு சக்திகள்! நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறதே — அணுகுண்டு! உன்னையே நீயே அழித்துக் கொள்ளக்கூடிய 'ஹைட்ரஜன்' குண்டு! இவை மட்டுமா? இன்னும் எத்தனையோ தீய சக்திகள் திசை எட்டும்!..."

"சீ, சீ! வாயை மூடு!..."—கட்டிடத்திற்கு பொல்லாத கோபம்!

"என் வாய் மூடவே மூடாது! நீ வசிக்கும் பூமியிலே பூத்திருக்கிறதே கொடுமைகள்; அவைகளை ஓயாமல் எடுத்துச் சொல்லிக் கொண்டேதான் இருக்கும்..."

"இல்லை; அப்படிச் சொல்லாதே, கரிக் கடலே! 'அழுது கொண்டேதான் இருப்பேன்—ஐயோ, இப்படி அதள பாதாளத்தில் கிடக்கிறேனே, தலை எடுக்க முடியாமல் என்று புலம்பிக் கொண்டேதான் இருப்பேன்' என்று சொல்! வேண்டும் உனக்கு, திமிர் பிடித்த பொறாமையின் உருவமல்லவா நீ!..."

கோபத்தால் எதுவும் பேச முடியவில்லை, கடலுக்கு!

'ஓகோ' என்று சிரித்தது கட்டிடம்!

"கண்டபடி பேசாதே கட்டிடமே! கர்வத்தால் தலை கீழே நிற்காதே! உன் ஆயுள் நிலையல்ல! இன்று வளருவாய்; நாளை தரைமட்டமாவாய்!..."

கட்டிடம் சிரித்தது. "புலம்பாதே! எனக்கு சோதிடம் கணிக்கும் சமுத்திரமே; நீ தலை தூக்க ஏதேனும் வழியுண்டா என்று தேடு; அல்லது இன்னும் பாதாளத்திற்கு ஓடு!...... நான் வளருவேன்; இதோ, என் பக்கத்தில் இருக்கும் மரம் வளரும்; செடி வளரும்; கொடி வளரும்; வளர்ந்து கொண்டே இருப்போம்!......ஆனால் நீயோ......?"—கட்டிடம் 'ஓகோ' என்று சிரித்தது; பக்கத்திலிருந்த மரம் சிரித்தது; செடி சிரித்தது;

[தொடர்ச்சி பக்கம்—10]

எம். ஆர். கண்ணன்; அயன்புரம்

(?) ரஷ்யச் செயற்கைச் சந்திரனில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் 'சின்ன சீமாட்டி' என்கிற நாயைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

முன்பு 'சுப்பிரமணியர் மயில் வாகனத்தில் பூமியைச் சுற்றி வந்தார் இப்போது அந்த வேலையை ஒரு நாய் செய்து வருகிறது!

சி. ராமநாத ராவ்;
மேலகற்கண்டார் கோட்டை

(?) திரு ம. போ. சி. யார் இந்தி பற்றி என்ன கூறுகிறார்?

இப்போது என்ன கூறுகிறாரோ, தெரியாது. ஆனால் தமிழர்களது முதல் மொழிப் போராட்டத்தின்போது 'எலி வலை எலிகளுக்கே' என்று கூறிய 'ஆனந்த விகடன்' கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு 'இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை கேலி செய்தார்' என்பது மட்டும் நூற்றுக்கு நூறு உண்மை!

பி. ஜி. ரேசன்; காரமடை

(?) ஓய், எழுத்தாணியாரே! நீர் இந்தியாவின் நிதியமைச்சராயிருந்தால்...

நான் தன்மானமுள்ளவன். நிச்சயமாக வேறொரு நாட்டுக்குப் பிச்சை வாங்கப் போக மாட்டேன்!

தென்மலைத்தூதன்; பிராஞ்சேரி

(?) மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை என்போம் — என்று பெண்களை உதாரணம் காட்டி கருணாநிதி எழுதியிருப்பதாக ஒரு பத்திரிகை எழுதியிருக்கிறதே; அது பற்றி உம் கருத்து என்ன?

பாவம்; அந்தப் பத்திரிகாசிரியர் பாரதிதாசன் கவிதைகளைப் படித்ததில்லை போலிருக்கிறது! அதனால்தான் இப்படித் தெரியாமல் எழுதியிருக்கிறார்!

க. வெற்றிவேந்தன்; கோவை

(?) சோவியத் ரஷ்யாவில் தற்போது என்ன ஆட்சி நடைபெறுகிறது?

இரண்டு ஆட்சிகள்! ஒன்று எல்லோரும் வெறுக்கும் சர்வாதிகார ஆட்சி! இன்னொன்று எல்லோரும் வரவேற்கும் விஞ்ஞான ஆட்சி!

திசை எட்டும் புகழ் பரப்பும்
தீந்தமிழ்க் கருவூலம்...

முத்தாரம்

நவம்பர் இதழ்
இப்போது விற்பனையாகிறது!

டாலிஸ்மேன்

பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுக்கான சர். வால்டர் ஸ்காட்டின் பெருங்கதை தமிழில் சுருக்கித் தரப்பட்டிருக்கிறது....

புலவர் குழந்தை
பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை
பி. சி. கணேசன்
—ஆகியோரின் எழுத்தோவியங்கள்!

வாழ்க்கையின் கோடை
வங்கக் கதையைத் தழுவி மாறன் எம். ஏ. எழுதியிருக்கும் குடும்பக் கதை!

இவைகளோடு
விளக்கு- ஆசிரியர் மு. க. வின்
கவிதை நடைச் சிறுகதை!

பீப்...பீப்...

[9—ம் பக்கத் தொடர்ச்சி]

வாகனத் தூதுவர் விரைவாக பூலோகத்திலிருந்து உயிர்களைப் பிடித்து அனுப்புவார்கள்; தயவு செய்து அந்த ரகசியத்தைச் சொல்லு" என்று அவர் கேட்டார்!

விஞ்: அட, மண்டு! நீ தப்பித் தவறி அந்த எமப் பயலிடம் ரகசியத்தைச் சொல்லி விடாதே!

சீமா: ஏன்; பூலோகத்திலிருந்து சீக்கிரம் சீக்கிரமாக உயிர்களைப் பிடித்து அனுப்பிவிடுவான் என்று பயப்படுகிறீர்களா?

விஞ்: அது இல்லை. நீ சொல்லி விட்டால் நமது ராக்கெட் ரகசியத்தை அவன் அமெரிக்கர்களிடம் சொல்லிவிடுவான். பிறகு நமது குடியே முழுகி விடும்...

சீமா: ஆமாம், ஆமாம்! அதுவும் உண்மைதான்! நான் சொல்ல முடியாது என்று எமனிடம் கூறி விடுகிறேன்!

விஞ்: ஆமாம், உனக்கு அங்கே பொழுது எப்படிப் போகிறது?

சீமா: அதை ஏன் கேட்கிறீர்கள்? ஒரே 'போர்' அடிக்கிறது. பேச்சுத் துணைக்கு அங்கிருந்து யாரையாவது அனுப்பி வையுங்களேன்!

விஞ்: ரஷ்யாவிலேயே பேசுவதற்கு யாரும் கிடையாதே! இந்தியாவில்தான் பண்டித நேரு என்னும் பெரும் பேச்சாளி இருக்கிறார்...இல்லாவிட்டால் சென்னை நிதியமைச்சர் சுப்ரமணியம் இப்போது ரொம்ப அதிகமாகப் பேசுகிறாராம்...அடுத்த முறை அவரை அனுப்பி வைக்கட்டுமா?

சீமா: அப்படியே செய்யுங்கள்... சீக்கிரம் செய்யுங்கள்...அய்யய்யோ...அதோ ஒரு எரி கல் என்மீது மோத வருகிறது. நான் ஒதுங்கிக் கொள்கிறேன்...

[அதற்குமேல் கம்பியில்லாத் தந்தி இயந்திரம் நிறுத்தப்படுகிறது.]

—மாறன்

[2—பக்கத் தொடர்ச்சி]

யிலே இன்னும் பாயவில்லை? கேரள அரசாங்கம், சாதிப் பெயர் போட்ட பலகைகளை அழித்துவிட வேண்டுமென அறிக்கை விடுத்திருக்கின்ற முறையை நீங்களும் ஏன் கையாளக் கூடாது?"—இங்ஙனம் தன்னைத் தோற்கடிக்க அரும்பாடுபட்ட தன் தந்தையின் போராட்டம் குறித்து தனயன் சட்ட சபையிலே முழங்கியிருக்கிறான்! "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்!" என்பதை எங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டி உபதேசிப்பதோடு மட்டுமன்றி—அதன்வழி நடந்து காட்டுபவர் எங்கள் அண்ணா வாகும்!

வள்ளுவர்: தம்பி! நீ கூறுவதைக் கேட்டவுடன்தான் என் உள்ளம் மகிழ்ச்சியடைகிறது!

[தி. மு. க. வைத் திருவள்ளுவரே புகழ்வதைக்கண்ட விகடனார் நைசாக நழுவி விட்டார்!]

—"இன்பபுரியான்"

தாய் சோற்றுக்கு ...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இதில் இம்மியளவு தவறினாலும் தவறியவர்கள் நாடு கடத்தப்படுவதோடு அவர்களுடைய சொத்துக்களையும் எடுத்துச் செல்ல உரிமை மறுக்கப்படும். அதுபோலவே பர்மாவில் தங்கி வாழ்வதற்கு ஆண்டுக்கு 10 ரூபாயாக இருந்த கட்டணம் இப்பொழுது 100 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. அங்கே வாழ்வோரில் பெரும் பகுதியினர் ஏழைகளானதால் இதுபோன்ற பெரிய கட்டணத் தொகைகளைத் தருவது முடியாத செயல். அதோடு ஏற்படுத்தியிருக்கின்ற சட்டங்கள் அனைத்தும் அங்கே வாழ்வோரை வதைப்பதாகவே இருக்கிறது. இந்தக் கட்டணத் தொகைகளைக் குறைக்குமாறு வற்புறுத்த வேண்டும். ஏற்படுத்தப்பட்டுள்ள சட்ட திட்டங்களை ஓரளவு தளர்த்தும்படிச் செய்யவேண்டும். இவ்விரண்டும் மத்திய அரசாங்கத்தின் முக்கிய வேலைகள்!

மூன்றாவது குறை பர்மாவில் உழைத்துப் பிழைப்போரின் பராமரிப்பில் தாயகத்தில் வாழ்வோருக்கு பண உதவி தருவதை ஒட்டியது. அன்னியச் செலாவணி சம்மந்தமாக எழுந்துள்ள பல கட்டுப்பாடுகள் இத்துறையில் பல முட்டுக் கட்டைகளை ஏற்படுத்துகின்றன. மனிதாபிமானத்தையும், நியாயமான உரிமையையும் அடிப்படையாக வைத்து மத்திய அரசு இதுபற்றி பர்மா தலைவர்களுடன் பேசி ஒரு நல்ல முடிவு ஏற்படுத்த வேண்டும்.

உள்நாட்டில் ஏற்பட்ட கலகத்தின் காரணத்தால் பர்மா நடுங்கிக் கொண்டிருந்தபோது இந்தியா படைக்கலன்கள் பல அனுப்பிக் கொடுத்து பயத்தால் துடித்த பர்மாவுக்கு ஆறுதல் அளித்தது. இதை பர்மா முதல்வரே ஒருமுறை வெளிப்படையாகக் கூறி இந்தியாவுக்கு நன்றி நவின்றார். சொல்லாலே நன்றி கூறி மகிழ்ந்த பர்மா செயலாலே அதே நன்றியுணர்ச்சியைச் சித்தரித்துக் காட்ட வேண்டும். அல்லது அது கூறிய நன்றி உள்ளத்திலே நஞ்சும், உதட்டிலே இன் சொல்லும் கொண்டு வாழ்வோரின் வெல்லச் சொல்லின் பாற்பட்டதேயாகும்.

"பொழுது தோறும் புனலுக்கும், அனலுக்கும், சேற்றினுக்கும், கக்கும் விஷப் பாம்பினுக்கும். பிலத்தினுக்கும், கடும் பசிக்கும், இடையறு நோய்களுக்கும், பலியாகிக் கால் கைகள் உடல்கள் சிந்தும் பச்சை ரத்தம் பரிமாறி இந்த நாட்டைச் சலியாத வருவாயும் உடைய தாக்கித் தந்ததெவர்?"

என்ற கவிஞரின் கேள்விகளையெல்லாம் தமிழர் வாழும் 27 நாடுகளிலே நின்று கேட்டுப் பார்த்தாலும் கிடைக்கின்ற ஒரே பதில் 'தமிழர்' என்பது தான்.

அவர்களது குறைகள் அரசாங்க ரீதியாகக் கவனிக்கப்படவில்லை.

காரணம், இங்கு இருப்பது வடவர் அரசாங்கம்...இந்த நிலை என்று மாறுமோ? என்றுதான் தமிழர் குறை தீர்க்கும் தனித் தமிழர் அரசாட்சி உருவாகுமோ?

—நாஞ்சில் செ. அன்பழகன்